A collection of Pattabi’s FB postings of Aug 2024

2024

AUg

AUGUST 2024 FB Posting Of Pattabi



pattabi raman

FB postings

8/1/2024

Pattabi Postings Aug 2024

Aug 2024 FB

aug 1

So said Vinobaji

If I am under some other person's command, where is my self government?

Self government means ruling your own self.

It is one mark of swaraj not to allow any outside power to exercise control over oneself. And the second mark of swaraj is not to exercise power over any other. These two things make swaraj- no submission and no exploitation

aug 1

மனிதன் பூரண விடுதலை என்கிற கனவை சுமந்து கொண்டே வருகிறவன். ஏராள சிந்தனை கீற்றுகளை அதற்காக முடைந்தவன். பல்வேறு இசங்களின் வழி கடைதேற்றம் சாத்தியமாகும் என்கிற நம்பிக்கையை துரத்திக்கொண்டிருப்பவன். மதங்களின் வழி சோதித்தவன்.

தன் விடுதலையை compartmentalise செய்துகொண்டு அரசியல் விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என, ஒவ்வொன்றிற்குமான எழுத்து சிந்தனை செயல் கிடங்குகளை ஏற்படுத்திக்கொண்டவன். மார்க்சிய அம்பேத்கரிய பெரியாரிய என எதிலுள்ளும் இந்த ஏதோவொரு வகைப்பட்ட விடுதலை அதன் வழி சமூக நல்லிணக்க பூரணத்துவம் என்கிற கனவு வெளிப்படும். அதற்கான திட்டம் blue print எதிரி யார், கூட்டாளிகள் எவர் தலைமை சக்தி எவர் என்பது வெளிப்படும். இப்படி சொல்லப்படும் காரணிகள் ஏஜென்சிகளின் உள் யோக்கியாதாம்சங்கள் விவாதமாகும். இப்படி

மனித விடுதலைக்கான புறப்போராட்டங்கள் உலகில் பல்வேறு வடிவங்களை எடுக்கும். விவாதங்கள் வழிந்தோடும்.

இந்த பெருங்கனவின் சோதனையில் மகாத்மா காந்தியும் தன்னை தோய்த்துக்கொண்டவர். கரைத்துக்கொண்டவர். புறச்சோதனைகளின் நீள அகல பெரும் பரப்பை அவர் உள்வாங்கிக்கொண்ட அதே தருணத்தில், அகப்பரப்பின் விஸ்வ ரூபத்தை கண்டிட பெரும் அவஸ்தைகளை, சுய வதை சோதனைகளை மேற்கண்டவர். கொண்டாட்டங்களுக்கும் நிந்தனைகளுக்கும் மத்தியில் balance தவறாமல் நின்றவர்.

முன் பேசியவர்கள் வான்கார்டிசம் போதித்திருந்தால் இவர் exemplariness என சோதித்து நின்றவர். முன்பேசியவர்கள் பிறர் மீதான குற்றப்பத்திரிகையை முன்வைத்து உரிமைப் போராட்ட வழி விடுதலைக்கான கனவு தூரத்தைக் காட்டினால், இவர் தன்னிலிருந்து துவங்கிய அன்றாட கைக்கு எட்டும் வேலைகளின் கடமைகளின் ஈடேற்றம் என நின்று காட்டியவர்.

இவ்வளவு முன்னீட்டு வரிகளும் தாமஸ் வெட்டிக்கல் நூல் ஒன்றை சொல்வதற்காக தோன்றியவையே. தாமஸ் வெட்டிகல் priest-இறையியல் theology குறித்து உயர் பட்டங்களும் ஆய்வுகளும் கொண்டவர். இந்திய விடுதலைக்கு நெருக்கமாக செப்டம்பர் 1947ல் கேரளா கோழிக்கோட்டில் பிறந்தவர்.

வெட்டிகல் Thomas Vettickal அவர்களின் டாக்டர் பட்ட ஆய்வு 2002ல் நூலானது. தேசிய காந்தி மியூசியமும் க்யான் பதிப்பகமும் சேர்ந்த கூட்டு முயற்சியால் இந்த அற்புத ஆழமான நூல் கிடைத்துள்ளது.

Gandhian Sarvodaya Realising a Realistic Utopia என்பது நூலின் பெயர். தலைப்பில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கு பின்னாலும் இருக்கக்கூடிய கருத்தாங்கள் விரிவான ஆய்படு பொருளாகியுள்ளன. 310 பக்கங்கள் கொண்ட மிக கருத்து அடர்த்தி கொண்ட நூல் இது. பெரியவர் தாமஸ் வெட்டிக்கல் கடும் உழைப்பை நல்கியுள்ளார்.

வழக்கம் போல காந்திய terms நிரம்பியுள்ள நூல் - அவரின் சோதனைகள் வெறும் உபதேச நல்லெண்ண கனவோ விழைவுகளோ அல்ல எனப் பேசும் நூல். சோதிக்க முடிந்த, சோதனைகளின் வழி மெதுவாக வசப்படக்கூடிய நடைமுறையாக்க சாத்தியங்களே அவை. கட்டுமான அல்லது நிர்மாண திட்டங்களானாலும் அவரின் ideal self sufficient village republic முன்மொழிவுகள் ஆனாலும் , அகிம்சை வழி உள்ளூர் ஆற்றல் வழி மறுகட்டுமான சாத்தியங்களை கொண்டவையே என்கிற சிந்தனையை தாமஸ் தன் ஆய்வு நூல் வழி சொல்கிறார்.

தாமஸ் வரிகள் (காந்தியிடமிருந்து தான்) மாதிரிக்கு..

Sarvodaya being non violent socialism - all members of society are equal none low none high

Arrogation of a superior status by any of the varnas over another is denial of the law. Nothing there for the belief of untouchability

Economic freedom means the humblest feel equal to the tallest. This can take place only by capital or capitalists sharing their skill and capital with the lowliest and the least

Sarvodaya stood for the welfare of all, commitment to all kinds of sacrifices, even unto death, for the welfare of others was at the core ..spirituality of commitment to service sacrifice, absolute adherence to truth and ahimsa, cultivation of fearlessness, recognition and practice of bread labour..on the basis of these moral values Gandhi sought to evolve a social economic and political order for poor

தாமஸ் அவர்களின் நூல் வந்து 22 ஆண்டுகள் ஆகியிருந்தாலும் , அதன் விவாத பரப்பு இன்றும் fresh ஆக இருப்பதை உணர முடிகிறது. காந்தி ever expanding என்கிற விரிவில் இதை உணரலாம்.

இந்நூல் அமேசானில் ரூ 500க்கு மேல் என பார்த்த நினைவு. வந்த போது ரூ 150 க்கு கிடைத்தது. காந்தியர் பலர் படித்திருக்கக்கூடும்.

வாய்ப்புள்ளவர் படிக்கலாம். மார்க்சியம் குறித்த விவாதங்களும், காந்தியை மார்க்சிற்கு சற்று நெருக்கமாக கொண்டு போகும் புள்ளிகளும் இதில் கிடைக்கும்.

1-8-2024

aug 2

இந்தியாவில் சோசலிஸ்ட் இயக்கத்தை தொடங்கியவர்களில் பலர் அறிவுஜீவி இளம் குழாமினர். மார்க்சிய தாக்கம் நிறைந்தவர்களாக இருந்து, நேருவின் படைவீரர்களாக ஆரம்பத்தில் இருந்து காந்திய தாக்கம் பெற்றவர்களாக விடுதலைக்கு முன்னரே இவர்கள் உருமாற்றம் பெற்றனர்.

நரேந்திரதேவா காந்தியுடன் பயணித்தாலும் மார்க்சியம் மீது சாகிறவரை நம்பிக்கை இழக்காமல் இருந்தவர். சோவியத் குறித்து விமர்சனம் இல்லாமல் இல்லை. மினு மசானி மிக ஆரம்பத்திலேயே சோசலிசம் மார்க்சியம் சோவியத் மீதான விமர்சனங்களை உள்வாங்கி , இங்கிருந்த கம்யூனிஸ்ட்களை expose செய்வதில் தலையாய பங்காற்றினார். ஜெயபிரகாசின் நெருக்கமான அதிகம் சண்டைபோடும் தோழராக இருந்தார். பின்னர் அவர் ராஜாஜியுடன் சேர்ந்து காங்கிரஸ் விமர்சகராக சுதந்திரா கட்சி தலைமைக்கு சென்றார்.

அசோகா மேத்தா ஜனநாயக சோசலிசத்தில் அதிக நம்பிக்கையை வெளிப்படுத்தி வரலானார். திட்டக்குழு விவகாரங்களில் கவனம் செலுத்தினார். சோசலிஸ்ட் உள் விவகாரங்களின் ஊடாக காங்கிரஸ் நோக்கி நகர்ந்தார்.

மதுலிமாயி சோசலிஸ்ட்டாக பரிணமித்து, காங்கிரஸ் எதிர்ப்பு அரசியல் தான் மீட்சியைத் தரும் என லோகியா போல நம்பியவர். காங்கிரஸ் எதிர்ப்பு அரசியலுக்கு முடிந்தவரை கோட்பாட்டுருவாக்க எழுத்துக்களை கொடுத்தவர். ஜேபி லோகியா தகராறுகளை கண்ணுற்றவர். ஜனதா சோதனையில் கரைந்து போனவர். மதுதந்தவதேயையும் இப்படிச் சொல்லலாம்.

அச்சுத் பட்வர்தன் குவிட் இந்தியா காலத்து சோசலிச இயக்க சாதனையாளர்களில் ஒருவர். நிதானமானவர். இவர் சகோதரி ஜேபி

மீது தீராத காதல் கொண்டு காடு மலை தொரிந்து மன நோய் நிலைக்கு சென்றார். இவர்களும் இந்திய அரசியலில் காணமல் போனவர்கள்.

இந்திய சோசலிஸ்ட்களில் மின்னிய முதல் மூவராக ஜேபி, லோகியா, நரேந்திரதேவா எனச்சொல்லலாம். இவர்கள் அமைப்பை கட்டினாலும், தனித்த சிந்தனையாளர்கள். பலநேரங்களில் அமைப்பைவிட முன்னோக்கி நடந்தவர்கள். சோவியத் குறித்த பெருமிதங்களிலிருந்து விடுதலைக்கு முன்னரே தங்களை விலக்கிக் கொண்டவர்கள். நேரு காந்தி , காங்கிரஸ் மாற்று என ஊசலாடியவர்கள். சோதனைகளில் வெற்றி பெறமுடியாமல் (வெற்றி என்றால் அதிகாரம் பதவி தேர்தல் ஜெயிப்புகள் தொடர் மக்கள் ஆதரவு என்ற பொருளில்) சோகமாகிப் போனவர்கள். இவர்கள் எவருக்கும் அசாதரண சிந்தனை பலம் இருந்தது.

லோகியா காங்கிரஸ் நேரு எதிர்ப்பு, மார்க்சிய காந்திய குழைவு, சாதியை உணர்தல் தீர்வை முன்மொழிதல் என்கிற திசைவழியில் முன்வைப்புகளை வைத்தார். ஆயுள் நீட்சி இருந்திருந்தால் அவர் இன்னும் தன்னை தெளிவாக்கிக் கொண்டிருக்க முடிந்திருக்கலாம்.

ஜேபி மார்க்சியம், நேரு ஆதரவு இடதுகள், சோசலிஸ்ட் கட்சி சோதனை, partyless democracy, பூதான் வழி சர்வோதயா- அதற்காக ஜீவன் தான்- இந்திரா எமர்ஜென்சி , சம்பூர்ண கிராந்தி முழு புரட்சி என நகர்ந்தார். ஜனதா சோதனையில் லோகநாயக் ஆகி தன்னை உலகிலிருந்து விடுவித்துக்கொண்டார்.

இவர்களுடன் சில நேரம் காங்கிரஸ் எதிர்ப்பில் பயணித்த கிருபளானி தனித்த சிந்தனையாளர். காந்தி நேருவுடன் பயணித்தவர். அவரை காந்தியன் என்றோ சோசலிஸ்ட் என்றோ கறார் பொருளில் வரையறுத்துவிட முடியாது. காந்தி குறித்து நிறைய எழுதியவர். காந்தியின் சோசலிசம் சோவியத் சோசலிசத்தைவிட சரியானது என்கிற பார்வையும் அவரிடம் இருந்தது. நேரு காங்கிரஸ் எதிர்ப்பில்

கிருபளானி சில காலம் சோசலிஸ்ட்களுடன் பயணித்தார். தனி கட்சி சோதனையில் தோற்றார். எமர்ஜென்சி போது ஜேபியுடன் நெருக்கமாக மீண்டும் பயணித்தார்.

இந்திய சோசலிஸ்ட்கள் குறித்து கடந்த 35 ஆண்டுகளாக பார்த்து வருகிறேன். தோழர்கள் ரகு வீரபாண்டி நடத்திய மேடை இதழில்தான் சோசலிஸ்ட்களின் கருத்தியல் பயணம் என கட்டுரை ஒன்றை எழுதிப்பார்த்தேன். நரேந்திர தேவா, லோகியா, கிருபளானி, மினு மசானி, லிமாயி, அசோகா என சோசலிஸ்ட்கள் குறித்து விரிவாகவோ , குறைவாகவோ அவ்வப்போது எழுதியதுண்டு.

ஜேபியின் பட்டுப்போன கனவு என்கிற வாழ்வும் சிந்தனையும் எழுதி வைத்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. கொஞ்சம் சரி செய்தால் , இந்திய சோசலிஸ்ட்கள் பற்றி புத்தகம் ஒன்றை கொணரமுடியும். சோம்பேறி வாழ்க்கையில் எதுதான் வசப்படுகிறது.. ஒத்திப்போடுவதில் சுகம் கண்டால் என்ன செய்வது…

தாமஸ் வெட்டிகலின் சர்வோதயா நூல்தான் மேற்கண்ட குறிப்பை இன்று எழுத வைத்தது. அதில் வினோபா confession ஒன்றை தந்ததும், ஜேபி வினோபா பற்றி சொன்னதையும் தாமஸ் தந்தபடி இங்கு தந்துள்ளேன். தாமஸ் வெட்டிக்கல் நூல் ஆழமான ஒன்று..

வினோபா தன்னைப்பற்றி (Baba)..doesn’t know anything about politics. Gandhi knew that Baba Was ignorant of politics, but still had faith in him. Gandhi himself possessed faculties for both politics and spirituality. He publicly declared that Nehru was his political heir. The position of spiritual heir he reserved for Baba. For the last 25 years I have tried to act according to the duty placed on me. I don’t claim total success..Baba tried his best to promote spirituality. So Baba will not give his opinion about political matters

Vinoba about knowing Gandhi

I rarely mention Bapu’s name. Since others do it frequently, it is but proper for me to desist from it. But my soul is witness to the fact that I am a child of his. I was

a mere boy when I approached him in 1916. Since then I have lived under his so,e away and none other's. I have laboured a great deal to assimilate the ideas he has given us, the wealth of thought he has bequeathed to us from the beginning to the end. I can claim to have practised thoroughly the ideas he placed before us

JP about Vinoba

Vinobaji did something miraculous for some years. It appeared as though a new Gandhian process of social change and reconstruction emerged. But after his stormy bhoodan experiment not even a mild breeze blew, not to speak of mighty storm of gramdhan, gram swarajya or any other constructive experiment. Later he withdrew into his inner self, and started the experiment of action in the form of inaction.

பிரமிப்பான ஆளுமைகள். இன்றைய அரசியலில் காணடிக்கப்படும் பெரும் சிந்தனையாளர்கள்...இந்திய நவீன அரசியல் கிடங்குகளில் தூசிப்படர்ந்து கிடைக்கும் இவர்களில் பலர் எப்போது rehabilitate ஆவார்களோ..யாமறியேன் பராபரமே..

2-8-2024

aug 2

Delhi HC hearing and para 7 a

I happened to go through the reports of pensioners associations regarding the Delhi HC hearing on Aug 1, 2024 sent by some comrades. I have nothing to say about the report sent by the leaders . I heard the audio clip of the respectable president of AIBSNL PWA com DG. He has narrated the development after taking much pains in getting information about that Delhi HC court hearing .

I just place here only one observation of mine regarding the mentioning of OM dated 4 -8 - 2016 in that audio clip.

There are two OMS of DOPPW regarding implementation of 7 th CPC having the same date 4-8-2016.

The subject of the first OM is

"Implementation of Govt's decision on the recommendation of 7 th CPC- Revision of provisions regulating pension, gratuity, commutation, FP, disability pension, ex gratin lump sum compensation etc."

The second OM on that same date 4-8-2016 is having the other subject

"Implementation of Government's decisions on the recommendations of the 7 th CPC- revision of pension of pre 2016 pensioners/ FP etc"

In this OM only the audio clip quoted para is there.

Para 7 : The cases of CG employees who have been permanently absorbed in PSU will be regulated as follows.

(a)pension :

Where the Govt servants on permanent absorption in PSU continue to draw pension separately from the government, the pension of such absorbees will be updated in terms of these orders……

This para was much misunderstood by many even after clarification from the authorities concerned. The claim is : this para is applicable to bsnl absorbed pensioners also seeking pension revision from 1-1-2017 as per 7 th CPC of this OM.

This is for pre 2016 pensioners who are all drawing pension separately on permanent absorption, and that should be updated as per this orders. If we fail to decode that para 7 a , then confusion only prevails .

That para is telling the category of pensioners on absorption , opting Govt CDA pension for the service rendered in DOT, that is pro rata pensioners. That is for - Those employees absorbed but getting pension for the service rendered in DOT separately from the Govt , even while working in the PSU BSNL. That is those who simultaneously got pension for DOT service for the qualified years rendered as per CDA and as employee got PAY for the period starting from 1-10-2000 in IDA. We are combined service pensioners.

We the categories the lakhs in numbers , sought absorption as per 37 A are of different type of the clause of combined service pension , that is counting both DOT service and PSU service. On absorption, we did not get that provision of drawing ' continue to get pension'. We got only IDA pay and on retiring only we were fixed pension as per the formula of the Govt on that date.

DOT clarified no change in formula , when allowing change in gratuity enhancement, that also partially not linking that with DA as given by 7 th CPC.

This kind of same para 7 a was also there in the 6 th CPC om dated 1-9-2008 of DOPPw

If one reads the new rules , then this confusion of mistaking the applicability of para 7 a would go to the combined service pensioners.

The CCS pension new rules of 2021 clause 37 speaks this in a clear terms in sub clauses from 12 to 14 (than our old 1972 ccs pension rules 37 A sub clause .

The intention is to state facts straight, not to hurt any one.

2 - 8- 2024 17 hrs R. Pattabiraman

aug 3

Presenting facts as such and appealing DOT

The pension revision is in the cross road, we do not know in which direction it goes further.

There are pulls on equal side. With the support and the tool of PBCAT direction to settle the issue of pension revision , some of the associations are pressing 7 th CPC and contempt.

The counter pull is from DOT which takes up the case to Delhi HC, placing its argument of citing how the previous 2007 revision was done and so pension revision is not possible without pay revision. It is felt by DOT that the PBCAT position is not compatible with the existing rules and practices. They want stay to PBCAT judgment and also need of it to be quashed.

Four questions are here. All the questions and their answers are interlinked.

Are they never going to do any pay revision to BSNL employees?

Whether pension revision is not at all possible in the absence of pay revision?

The third one is if possible , what is the methodology - 7th CPC or 3rd PRC?

The fourth one is how to settle the anomaly between those pre and post 2017, as the demand is 'pension revision from 1-1-2017 for the pre 2017 pensioners'.

Associations and DOT both are suppressing one factor in their legal battle for obvious suitable reasons of their own, the minutes of the meeting held on Oct 2022 and the signed note sheet of various levels of officers including secretary telecom just previous to that meeting period.

In that meeting and the said note sheet , DOT agreed to consider pension revision in the absence of pay revision on 3 rd PRC scales, but with zero percent fitment. In that note sheet , solutions were placed for all the three questions raised above, barring the first one of bsnl pay revision.

But the associations differed on contentions. All took position in negating zero percent fitment. Some associations already gone to PBCAT refused to accept anything as per 3 rd PRC and demanded as per 7 th CPC.

And so now we are all in the dead end, waiting in the verandas of court rooms.

The psychology of almost all the pensioners is that they want pension revision some how, as they have been eagerly expecting it for the last 7 years. The methodology is the headache of some leaders and officers of DOT.

DOT may feel about rules and practices and cannot apply any ego. Applying ego is not the grammar of any rule abiding administration. Associations also need not have any ego as a collective entity, but some leaders may have ego and they push it and translate it as an organisational ego. Their only rupture starts.

In this scenario DOT can reveal its mind in three ways for amicable settlement, convincing the Delhi HC the impracticability of applying 7 th CPC w.e.f 1-1-2016 as bsnl absorbed are combined service pensioners , and it leads greater anomaly to post 2016 retirees.

They can again openly present the position taken by them in the Oct 17 th 2022 meet and as per the said note sheet in the court , pleading possible fitment between 5 to 15 % as that of PRC.

They can convince the Delhi court , by this via media solution in the absence of pay revision.

The third way is, allowing BSNL to settle pay revision with the fitment in the range in between 5 to 15 % and thereby settling pension revision by DOT simultaneously. No court will deny or intervene in any administrative mechanism of settling the case for the the benefit of the so called victims, here the pre 2017 pensioners and post 2017 pensioners.

Pensioners cannot take a position not to repose any faith on DOT and DOT should also not to suppress its earlier position taken to settle the issue , even in the absence of pay revision.

3-8-2024 R. Pattabiraman

aug 4

மித் பாதுரி பரிந்துரைக்கும் 'கண்ணியமான பொருளாதார வளர்ச்சி'

அமித் பாதுரி அவர்களின் ' Development with dignity a case for full employment' என்கிற பொருளாதார மாற்று குறித்த ஆய்வு நூல் வந்து 19 ஆண்டுகள் ஆகிறது. அமித் பாதுரியின் இந்நூலை என் பி டி 2007ல் தமிழில் கொணர்ந்தனர். தமிழகத்தின் முக்கிய மொழிபெயர்ப்பாளரான கண்ணையன் தட்சிணாமூர்த்தி அவர்கள் தேர்ந்த நடையில் , வாசிப்பவர்க்கு இதமாக மொழி பெயர்த்து தந்துள்ளார்கள். இந்த தமிழ் நூலின் அடுத்த பதிப்பு 2022ல் வந்துள்ளது. அதை அவர் அனுப்பி தந்தமைக்கு என் நன்றி.

சென்னையில் எத்திராஜ் சாலை அலுவலக பணிக்காலத்தில் , அருகாமையில் இருந்த NBT Show roomல் 2007ல் வந்தபோதே வாங்கி படித்தது நினைவிற்கு வருகிறது. திரு கண்ணையன் தட்சிணாமூர்த்தி சென்ற வாரம் அனுப்பிய 2022 பதிப்பை , திரும்ப நினைவூட்டிக்கொள்ளும் வகையில் வாசிக்கலானேன். மூல நூலே தமிழில் வந்துள்ளது போன்ற , எவ்வித நெருடலும் இல்லாத , மிக இலகுவாக வாசகரை அழைத்துச் செல்லும் மொழி பெயர்ப்பாக

' கண்ணியமான பொருளாதார வளர்ச்சி- முழு வேலைவாய்ப்புக்கான வலியுறுத்தல் ' இருப்பதை, வாசிக்கும் எவரும் உணரமுடியும்.

நூலின் தலைப்பே பேசு பொருள் என்ன என்பதை வெளிப்படையாக சொல்லி விடுகிறது. எவருக்கு கண்ணியமான வாழ்க்கைச் சூழல் இல்லை என்பதைக் கண்டுபிடிக்க பெரிய பொருளாதார அறிவு தேவையில்லை. அப்படிப்பட்ட ஏழை உழைப்பாளர்களை வேலை வழியில் வளர்ச்சியில் பங்கேற்க வைத்தல், நாட்டின் முன்னேற்றத்தில் அதன் பலனைப் பெறுவதில் தாங்களும் முழு பாத்தியதை உடையவர்கள் என்கிற கடமை- உரிமையை முன்வைப்பதுதான் இந்நூலின் சாரம். அமித் பாதுரி தன் சிந்தனைத் திறனால் இதை சிறப்பாக செய்திருப்பார். தன்

மொழிபெயர்ப்புத்திறனால் கண்ணையன் தட்சிணாமூர்த்தி தமிழர்களுக்கு அதை கடத்தியிருக்கிறார். இருவருக்கும் நன்றியையும் பாராட்டையையும் சொல்வோம்.

click the link to read the review

aug 5

எரிக் பிராம் அவர்களின் Marx's concept of Man 60 அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிரபலமான கருத்தாக்கம். இது போலவே Gandhi's concept of Man, Ambedkar's concept of Man, Periyar's concept man என அவர்களை அணுகி கருத்து தொகுப்பு ஒன்றை உருவாக்கவியலும்.

வலதின் சிந்தனையாளர்களிடத்திலும், பல்வேறு சமய இலக்கியங்களிலிருந்தும் கூட இந்த 'மனிதன் ' என அவர்கள் முன்வைக்கும் உரு ஒன்றை வரையலாம்.

பி என் கோஷ் காந்தியப் பொருளாதாரம் என தனித்து பேசுவதை ஏற்காதவர். 2007, 2012 ஆண்டுகளில் அவர் எழுதிய Gandhian political Economy, Beyond Gandhian Economics என்கிற ஆக்கங்களில் காந்திய அரசியல் பொருளாதாரம் என்பதுதுதான் , புள்ளிகளை இணைத்து உருவப்படுத்தினால் நமக்கு கிடைக்கிறது என சற்று அழுத்தமாகப் பேசுகிறார்.

தூய பொருளாதாரம் என்பதும் கூட சமூகத்திற்காகத்தான், அது தனி 'லாப் ' சிந்தனைக்கூடத்திலிருந்து உருவானாலும், வைக்கப்படுகிறது. இங்கு பொருளாதாரம் மட்டுமல்ல அரசியலும் அமைப்புகளும் கூட பயன்பாட்டுவாதம் utilitarianism என்கிற அச்சில் சுழலக்கூடியவைதான். Duty to develop all என்கிற பேச்சு right to develop myself - my authority என அரசியலில் translate ஆவதும் சத்தமில்லாமல் நடந்து வருகிறது.

'மோடித்தனம்' அல்லது 'கடலில் தூக்கி போட்டாலும் கட்டுமரமாய் மிதந்து தொண்டாற்றுவேன்- போன்ற தனங்களும்' மக்களின் அறியாமை emotional bonding மீதான ஒருவகை exploitation ஆவதைக் காணமுடியும். மிகவும் குனியக்கூடியவர்களின் மாரல் பெரும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. அவர்கள் நான் யார் தெரியுமா என நெஞ்சை விரிக்கவே, என் விஸ்வரூபத்தைப் பார் என்பதற்காகவே அந்த குனிதலை பெரும்பாலும் செய்கிறார்கள்.

பெரும்பாலும் மோடித்தனம் என்பதில் பேச்சு சேவக் என்றிருக்கும்- குறி சிம்மாசனமாக இருக்கும்.

காந்தியின் மனித மேன்மையில் ‘என் வழியில் வா புரட்சிகர பொன்னுலகு ‘ என்கிற உரையாடல் இருப்பதில்லை. இப்படி இந்த சூழலில் நடந்து காட்டினால், எவருக்கும் தீங்கு குறைவாக இருக்கலாம். அனைவருக்கும் கொஞ்சம் நன்மை கிடைக்கலாம் என்கிற முறையிலான exemplariness அது. அங்கு உரத்த சத்தம் இருப்பதில்லை. அங்கு அவசியமற்ற காரியங்களில் மனித சக்தியோ, அவனிடம் இருக்கும் சொற்ப பணமோ செலவிடப்படுவதில்லை. குறைந்த செலவில், குறைந்த தேவைகளுக்காக , நிறை உழைப்பைத் தரும் பயிற்சி அங்கு எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு பிரம்மாண்டம் எனக் காட்ட அல்லது கட்டவேண்டியது ஏதுமில்லை. அங்கு எல்லாமே beauty of small things.

மற்றவர்களை விட நான் அல்லது நாங்கள் வித்தியாசமானவர்கள் ஆகவே மேலானவர்கள் என்பதற்காக சாதி, மதம், இனம், மொழி, கலர், பாலினம், வர்க்கம் , ஊர் இன்னும் பிரித்தறியக்கூடிய அடையாளங்கள் எதுவே ஆனாலும் அவற்றிற்காக- அந்த தனித்துவத்திற்காக அல்லது இந்திய மொழியில் சொன்னால் ‘ பிராமணத்துவத்திற்காக’ உலக மொழியில் சொன்னால் ‘மேற்கிற்காக’ - உலகம் ஏராள energy யை செலவழித்துக்கொண்டிருக்கிறது. ஏன் நம் ஒவ்வொருவரும் இந்த trapல் சிக்கி நம்மால் ஆன செலவுகளை செய்கிறோம் அல்லது மற்றவர்களுக்கு செலவு வைத்துக்கொண்டிருக்கிறோம். இங்கு பிராம்மண நீக்கம் என்பதும் பிராம்மணத்துவ வழியையே மேற்கொள்ளும் முரண் நடந்தேறிவருகிறது. தனித்துவம் ஏராள சமூக செலவையே வைக்கிறது.

Economics that hurts the moral well being of an individual or nation is immoral and therefore sinful . True economics never militates against the highest ethical standard ..என காந்தி சொல்லிக்கொண்டே இருந்தார். தூய

பொருளாதாரமானாலும், அல்லது மார்க்சிய பொருளாதாரமானாலும் இந்த எதிகல் மாரல் மனிதன் என்பதை முகமாக்கிக் கொள்ளாமல் விட்டுவிட்டன. தேவைகளின் பெருக்கம் அதை அடைதல் என்கிற பெருந்தொந்தரவில் நம் உலகம் சிக்கி நிற்கிறது.

Truth is your inner voice என்பதை unscientific என அவர்கள் நிராகரித்ததை பார்க்கமுடிகிறது. By all means victory என்கிற தான் விழையும் திசைக்கு முடிவிற்கு moral means என்பது பொருட்டாக நம்மிடம் இல்லை போலும்.

Gandhi’s concept of Man என்கிற essay Beyond Gandhian Economics நூலில் முக்கிய ஒன்றாக எனக்குப் பட்டதால், மேற்கண்ட உதிரிகள்.

5-8-2024

aug 6 (reposting)

காந்திக்கு தென்னாப்பிரிக்க நாட்களிலேயே இந்த மனநிலை நன்றாக வசப்பட ஆரம்பித்தது. எதிரான செயல்கள் செய்யக்கூடியவர்களை எப்படி புரிந்துகொண்டு அணுகுவது..அந்தச் செயலை மனம் அறிந்து மனதார போலியாக இல்லாமல் செய்திட எவ்வாறு கற்றுக்கொள்வது என்கிற போராட்டம் அவருக்கு மெல்ல புரியலானது.

முதல்பாடமாக அவர் எடுத்துக்கொண்டது எதிரியை opponent- deserved or not எனப் பார்க்க வேண்டியதில்லை. Accept his bonafides. அடுத்து அவருக்குரிய தனிப்பட்ட மரியாதையை தந்துவிடு. முடிந்தவரை அவரிடம் ஏதாவது சிறந்தது தெரிந்தால் அதை வெளிக்கொணரப் பார். உன்னிடம் ஏதாவது correction தேவைப்படுகிறதா என turn searchlight inwards

எப்போதும் உனது சிந்தனையை நெறி சார்ந்த அடிப்படைகளில் மேலாண்மை செய்ய முயற்சி செய். Lack of Inner sanction ஏதாவது இருக்கிறதா என்று பார்.

வலிமையானவர்களுடன் , அதிகாரம் கொண்டவர்களுடன் போராடும்போது சோர்வும் கசப்பும், முடியாதா என்கிற பலவீன எண்ணமும் தோன்றலாம். அப்படி அவற்றை எதிர்கொண்டு மீள்வதற்கு பிரச்சனைகளின் bright sideயை தேடு.

மனிதனையும் அவன் செயல்களையும் ஒன்றாகப் பார்க்காதே. Evil has to be fought and destroyed, not the evil doer. The evil that a man does is an aberration, not an essential part of his nature

Systemத்தில் மனிதன் அவ்வாறு செயல்படுகிறான். அது அவனைவிட பெரிதாக நிற்கிறது. It is quite proper to resist and attack a system, but to resist and attack its author is tantamount to resisting and attacking oneself. Hate the sin not the sinner.

- Mahatma vol 3 ch 4 ல் இக்கருத்துக்களை பியாரிலால் தருகிறார்

aug 8

என் போன்றவர்க்கு ஆர்வமூட்டும் essay ஒன்றை பி என் கோஷ் எழுதியுள்ளார். அந்த ஆய்வுப்பொருள் dialectics and development- Hegel Marx Gandhi என்கிற தலைப்பில் அமைந்துள்ளது.

'தோழர் காந்தி' நூலை எழுதும்போது சில முக்கிய ஆய்வாளர்களை இணைத்து பார்த்து எழுத முடியாமல் போனது. மார்க்ஸ் காந்தி சந்திப்பு புள்ளிகள், மாறுபடும் பார்வைகள் குறித்து தொடர் தேடுதல்களை மனம் நாடுவதால், ஆஹா இது கிடைக்கிறதே என ஒவ்வொன்றையும் பார்த்து கிடங்கிற்குள் கடத்த வேண்டியுள்ளது.

இந்திய அரசியல் இந்த இருவரையும் புறக்கணிக்காது செல்லுமா என்கிற எதிர்பார்ப்புத்தான், வேறு ஏதுமில்லை.

ஹெகல் என்றால் இயக்கவியல் - மார்க்ஸ் அதை உள்வாங்கி diamat ஆக தன் சிந்தனையை motion changes வைத்து வெளிப்படுத்தினார் என்பதை மார்க்சியம் அறிந்தவர் உணர்வர். இயக்கவியல் பொருள் முதல்வாதம், வரலாற்று பொருள் முதல்வாதம் என அங்கு தோழர்கள் அறியத்துவங்குவர்.

பின் என் கோஷ் Gandhian dialectics என்கிற ஓர் அம்சத்தை ஹெகல் மார்க்ஸ் என்பாருடன் இணைப்பதுதான் அவரின் சிறப்பாக எனக்குத் தோன்றியது. காந்தியிடம் இயக்கவியல் தன்மை எப்படி வெளியானது. சமூகத்தில் அவர் கண்ட conflicts களை எப்படி தீர்வுகாண விரும்பினார் என்கிற conflict management என்பதற்கு அடுத்த ஒன்றாக இந்த இயலை தன் நூலான Beyond Gandhian Economics ல் கோஷ் அடுக்கியிருப்பார்.

மார்க்ஸின் இயக்கவியல் பொருள் என்கிற mono மூலம் இயங்க ஆரம்பித்தால் காந்தியின் இயக்கவியல் spiritual moral என்கிற monoவில்

இயங்க ஆரம்பிக்கும் என்கிற பார்வையை கோஷ் தருவார். Synthesis என்பதில் காந்தியும் பெரு முயற்சியாளராகவே தொழிற்பட்டுள்ளார். Relative truth என்கிற அம்சம் வழியாக அவர் இணக்கப்படுத்த முடியுமா எனப் பார்த்துள்ளார்.

ஒன்று உங்களுக்கு தரப்பட்டுள்ளது. அது மோசமான விளைவுகளை சமூகக் கேடுகளை, மனித நேயத்தை கெடுக்கிறது எனில் அதை மாற்றி முடிந்தவரை கேடுகள் இல்லாமல் செய்திடும் அகிம்சை வழி தேர்வை காந்தி சோதனையாக்கிக்கொண்டார். விரும்பும் தீர்விற்காக வழி குறித்து பார்க்க வேண்டாம் என்பதை காந்திய இயக்கவியல் ஏற்காது. வழியின் நேர்மை அறவழி என்பதும் விழையும் தீர்வைப் போல அங்கு முக்கியமாகிறது.

கோஷ் எழுதுகிறார்

Gandhi found a contradiction between material affluence and moral degradation. காந்தி voluntary limiting of wants குறித்து பேசினார். அதேநேரத்தில் ஏழைகளுக்கு சமூக சிஸ்டம் ஏற்படுத்தும்

forcible denial of basic necessities க்காக போராடினார்.

காந்தியிடம் ஒழிப்பு என்கிற அஜெண்டா ஏதும் இல்லை. எவர் பாதிப்பை உருவாக்குகிறார் என்பதை பொது புத்தியால் உணரமுடிகிறதோ அவரே உகந்த தீர்விற்கு முன்வருபவராக மாற்றப்படுவார்- அல்லது தன்னுள் மாற்றமடைகிறார் என்கிற இயங்கு வெளி அங்கு எதிர்பார்க்கப்படுகிறது. சோதனை செய்யப்படுகிறது. அகிம்சை வழியாக அது அமையும் , தொடர் conflict களை மட்டுப்படுத்தும் எனப் பார்க்கப்படுகிறது.

சரி நீட்டாமல் கோஷ் பட்டியலிடும் சில அம்சங்களை மட்டும் சுருக்கமாகக் தருகிறேன். Ghosh has tabulated it, but I prefer to give in text

Marx's views

Material basis for socio economic changes

Dialectics material

Production relations- historical changes

Sad plight of labour in the capitalism

Class struggles inevitable

Capital labour conflict - revolution

Conscious about dialectics

Gandhi's views

Moral progress is more critical than material progress

Spiritual dialectics

No such production relation theory

Plight of labour felt in the capitalism

Class harmony proposal

Conflict management thro negotiations , persuasion if necessary satyagraha- no proposal of revolution for material affluence but seeking moral revolution

Gandhi used dialectics not with any consciousness

கோஷ் கட்டுரையின் சாரத்தை மட்டுமே நான் உணர்ந்த அளவில் கொடுத்துள்ளேன். வாய்ப்புள்ளவர் நூலை படிக்கலாம். Sage 2012 .

aug 9

Marx Gandhi Dialectics குறித்து ஆக8 2024ல் இடுகை ஒன்றை செய்திருந்தேன். ஆய்வாளர் பேரா பி என் கோஷ் 'காந்திய பொருளாதாரத்திற்கு அப்பால் ' என்கிற ஆங்கில நூலில் காணப்பட்ட essay ஆன அந்த காந்திய இயக்கவியல் பார்வையை மார்க்ஸ் பார்வையுடன் சேர்த்து சுருக்கமாக வைத்திருந்தேன்.

என் வாசிப்பில் அறிய நேர்வதை, என் புரிதல் quality நிறை குறையுடன் எழுதுவது (எழுதி பார்ப்பது) என்பதைத் தவிர அதற்கு வேறு முக்கியத்துவம் ஏதுமில்லை. ஆர்வம் உள்ள எவரிடமாவது அது சேரும்போது,அவர்கள் தங்கள் உழைப்பால் மேலும் செழுமை செய்துகொள்ள உதவலாம் என்கிற சிறு ஆசையும் அதில் தொழிற்படும்.

இன்று Gandhi's Theory of Justice என ஏதேனும் இருக்கிறதா , அது theoretical உலகில் பேசப்படும் பிற theories of Justice யை எப்படி தன்னுள் synthesis செய்துகொண்டுள்ளது - unconscious ஆக என கோஷ் ஆய்வு செய்கிறார். இந்த unconscious என்பது காந்தியை குறித்து அவர் தியரி என உருவாக்காத ஒன்றைப் பற்றி பேசும்போது சொல்லப்படவேண்டியது மிக அவசியமானது)

ஏராள பிற நீதி குறித்த நியாய கோட்பாட்டு தராசுகளை சுருக்கமாக சொல்லிவிட்டு பேரா கோஷ் , காந்தியின் நியாய கோட்பாடு என எவற்றை பின்னமுடியும் என சிந்திக்கிறார். ஓரளவு அந்த முடைதலை அவர் செய்துள்ளார் எனலாம். அப்படியே ஆங்கிலத்தில் சில முக்கிய கருத்தாக்கங்களை தருவது, அதன் ref தன்மைக்கு உதவும்.

தமிழ் ஆங்கிலம் கலந்த நடையில் வழக்கம் போல , என் உள்வாங்குதலுக்கு ஏற்ப தர முயற்சிக்கிறேன்.

காந்திய நீதி நியாயம் என்பது மனிதனை கண்ணியமாக நடத்துதல் fair treatment dignified treatment என்பதில் அமர்கிறது. விடுதலை உணர்வு,

சமத்துவ வாய்ப்புகள் போன்றவற்றை இயற்கையான உரிமைகளாக அது பாவிக்கிறது. அமுலாக்கத்திற்கு நிற்கிறது.

ஒவ்வொருவரின் உரிமையும் கடமை சார்ந்து பெறப்படுதலாக இருக்க வேண்டும், duty based rights என அது புரிய வைக்க முயற்சிக்கிறது. எவரையும் எதையும் கட்டாயப்படுத்தி, வன்முறை முனையில் செய்ய வைக்கும் முறையை அது ஏற்கவில்லை.

நெறி சார்ந்த சமூக மேம்பாட்டிற்கு கேடு இல்லாதவற்றை மனிதன் செய்துவர அது விழைகிறது. நெறியற்ற , மனதிற்கு சமாதானமாகாத, தவறு என்று உணரக்கூடிய ஒன்றை , எந்த அதிகாரம் எந்த ஆயுதத்துடன் வந்து நின்று வலியுறுத்தினாலும், அதை செய்ய இயலாது என்பதை அமைதியாக சொல்ல முடியும் என்கிற பக்குவ பயிற்சியை சத்தியாகிரகிகள் பெற விழைகிறது.

தனது போராட்டத்தில் இரு அம்சங்களை கடைபிடிக்க அது வேண்டுகிறது. Absence of duress- no harm to opponent. எதையும் நிர்ப்பந்திக்க வைத்து சாதிக்கக் கூடாது, எதிரியை காயப்படுத்தி தொந்தரவுக்கு உள்ளாக்கக்கூடாது.

கண்ணுக்கு கண் என்கிற நீதியை ஒருபோதும் அது ஏற்பதில்லை. அப்படி செய்து உலகை இருளாக்க வேண்டாம் என அது எப்போதும் பேசுகிறது. நான் செய்வதெல்லாம் சரி, பிறர் செய்வதெல்லாம் தவறு என்கிற பார்வையை- அது வைப்பதில்லை.. என் அளவில் தன் சரிக்கான சுய நடவடிக்கைகள் என்ன என்பதிலிருந்தே அது துவங்குகிறது.

சாத்தானின் நீதி என்பது குறித்து தெளிவைக் கோருகிறது. தூய நியாயம் என்கிற புரிதலை வற்புறுத்துகிறது. பழிவாங்கும், சுயநல செயல் சார்ந்து விளைவிக்கப்படும் கேடுகள் குறித்து அது எச்சரிக்கிறது.

காந்தி எழுதிய ஓரிரு வரிகளை தருகிறேன்

Pure justice is that which is inspired by fellow feeling and compassion. It is justice tempered with generosity.. The way of justice which has no place in it for fellow feeling or compassion is known as satanic. Satanic concept of justice is vindictive, wicked and is motivated by revenge and selfish personal gains.

எப்படிப்பட்ட கடமையை மனிதன் எடுத்துக்கொள்வது நீதியானது என அதில் சொல்லப்படுகிறது. The work that is ethically salutary, morally upright and practically just.

Bread Labour என்பதை அது முன்வைக்கிறது. எவரே ஆனாலும் உழைப்பு இல்லாமல் உண்பது நியாயமில்லை என தன் நிலையை தெளிவுபடுத்துகிறது.

எப்படி அநீதியைஎதிர்கொள்வது என்பதற்கான நியாயத்தையும் அது பேசுகிறது.

உன்னைவிட மாட்டேன் என பிடித்து தாக்கி மோதி அழிக்க முயற்சிப்பது- அதில் தன் அழிவையும் சேர்த்துக்கொள்வது என்கிற ஒரு முறை. வன்முறை வழி.

மற்ற ஒன்று அகிம்சை. தான் மடிவது குறித்து மட்டும் சித்தமாக இருப்பது, அதற்கு மட்டும் தன்னை தயார் படுத்திக்கொள்வது. தன் மாய்த்தல் வழி இருப்பவர் வாழ்வை உயர்த்தும் தன்மையானது.

இங்கு காந்தி சொல்வதைத் தருகிறேன். பிறரை கொல்வதற்குரிய எந்தக் காரணமும் என்னிடம் இல்லை. என் உயிர் மாய்வதற்கு எனில் பல காரணங்கள் இருக்கின்றன.

காந்திய நியாயத்தில் capability குறித்த புரிதல் என்ன எனத்தேடினால் இந்த வரிகளை கோஷ் வழி பெறலாம்

Gandhi’s conceptualisation of capability will depend upon supply of basic necessities of life , right to have proper house, balanced diet, clothes , education and medical relief.

இந்த நியாயங்களை கோடானுகோடி மக்களுக்கு தர முடியாத அரசை, சமூகத்தை, அரசியலை, அமைப்புகளை, தனிநபர்களை நீதிமான் நியாயவாதி என அழைத்துக்கொள்ள இயலுமா என்கிற கேள்வி இருக்கவே செய்கிறது. பதில்கள் அவரவர்க்கானது...

9-8-2024

aug 9

Delhi HC - Revision of Pension

I happened to see one comment of one Judge, in one of the reports of the associations circulated to its members.

" …At one point during the proceedings, the Judge remarked that the issue seems to revolve around RS 1700"

If it is so as reported, then unfortunately the whole issue is reduced to a quantity as if the the basis of the entire case is that. Unless one understands the main contention of the case, it is difficult to avoid the possibility of its derailment.

The contention is :

For the Association , implementation of PBCAT direction is a must- that is pension revision to the absorbed BSNL/ MTNL as per their counterpart in CG- as per 7 th CPC (date is not specified. Demand is from 1-1-2017, but CPC means from 1-1-2016 only)

For DOT , implementation of PBCAT is not possible, as it is against the settled law of the land. For fixation of pensionary benefits we need pay and so pay scales. BSNL is yet to implement 3 rd PRC on affordability issues and so could not do pension revision. So quash that PBCAT order.

Unfortunately the submission of DOT shows though fairly its main contention , exhibits its bias also by stating even in the second PRC scales absorbed pensioners are getting higher than 7 th CPC. How can this be a cause for not doing any pension revision. Higher or lower cannot be the issue for pension revision. DOT may feel its right to say the settled law of the land, but this kind of higher or lower argument is very unfair.

I happened to see the submission of one association, which in my view is not stating all the facts and partially suppressing the facts. Of course it is their right to highlight the points to win and dim the points not so favourable.

I do not know what is the submission of the association that I paid life subscription. If available or sent by some comrades, then I can understand the contents of its submission.

Both the associations and DOT for their obvious reasons, are not bringing the fact of Oct 2022 meeting and the circulated note sheet and its contention to the knowledge of PBCAT and Delhi HC.

This piece is to give caution about the comment of RS 1700 in the court room , if at all anything said so, then that is unfair , a kind of reductionism of the issue .

Let the issue find its serious course of arguments and reach its culmination. Let us not fall prey to any misdirection.

Whatever may be the direction, let the entire lakhs of absorbed whether pre or post 2017 retired and retiring beyond 2027 be a single class, as a flock together.

11.30 hrs 9-8-2024

aug 10

விஜயேந்திர கஸ்தூரி ரங்க வரதராஜ ராவ் புகழ் வாய்ந்த பொருளாதார பேராசிரியர். வி கே ஆர் வி ராவ் என அறியப்பட்டவர். அமைச்சராக இருந்தவர். திட்டக்குழு உறுப்பினராக செயலாற்றியவர். கல்லூரி முதல்வர், துணைவேந்தர் என பல முகம் கொண்ட அறிஞர்.

Delhi School of Economics, ISEC - Institute for social and economic change போன்ற நிபுணத்துவ அமைப்புகள் அவரது பெயரை மறக்காமல் சொல்பவை. இந்திய பொருளாதாரம், வளர்ச்சி குறித்து பல நூல்களை அவர் எழுதியுள்ளதை அவரைத் தேடிச் செல்வோர் காணமுடியும்.

ராவ் அவர்கள் ஜனநாயக சோசலிச மரபை சேர்ந்தவர். உலக அளவிலான பொருளாதார அறிஞர்கள் குறித்து மட்டுமல்லாது, சோவியத்- சீனா சோசலிச கட்டுமான பிரச்சனைகளை அறிந்தவர். காந்திய பொருளாதாரம் குறித்தும் பேசியவர். நேருவின் மாண்பு மரபு குறித்து நூல் எழுதியவர். பொருளாதாரம் என்பதை தாண்டி சமூக அரசியல் சிந்தனை குழைவு நூல்கள் எனப் பார்த்த அளவில்

The Gandhian Alternative to Western Socialism(1970), Nehru Legacy 1971, Swami Vivekananda vedanti Socialism (1979), Indian Socialism (1982) , National Integration (1985) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனக்கான ஆர்வத்தில் குறிப்பிட்டு சொல்ல விழைவது ராவ் அவர்களின் ‘இந்திய சோசலிசம் ‘ என்கிற நூல். மிக எளிய நடையில் எவரும் விரைவாக படிக்கக்கூடிய வகையில் எழுதப்பட்டிருக்கும் நூல். புதிர்களை தரும் தலையை சுற்றவைக்கும் terminology scholarship ஏதும் காட்டாமல் எளிய வாதங்கள் மூலம் , இந்தியாவில் சோசலிச் கட்டுமானம் குறித்து பேசிய நூல் என ராவ் அவர்களின் இந்த புத்தகத்தை சொல்லலாம்.

Concept publishers தங்களிடம் இருந்த 42 வருடத்திற்கு முன்னரான 1982 பதிப்பின் கடைசி காப்பியை எனக்கு அனுப்பி வைத்து , என் தூசி ஒவ்வாமையை சற்றுக் கூட்டியுள்ளனர். அப்போது ரூ 70 க்கு போட்டதை , அதிகம் விலை ஏற்றாமல் ரூ 300 என ஸ்டிக்கர் ஒட்டி, அமேசான் செலவுடன் அனுப்பியமைக்கு அவர்களுக்கு நன்றி.

வி கே ஆர் வி ராவ் இந்த நூலை இரு பகுதியாக பிரித்து The Background to Indian Socialism , The Indian Socialist Experiment என தலைப்பிட்டுள்ளார். முதல் பகுதி 4 இயல்களைக் கொண்டது. இப்பகுதியில் முதலாளித்துவ மேற்கு நாடுகள் , முந்திய சோவியத் கிழக்கு அய்ரோப்பிய மற்றும் சீன அனுபவங்கள், காந்தி இந்த இரண்டு சிஸ்டங்களையும் எப்படி உள்வாங்கிக்கொண்டு இந்திய கிராமப்புற தன்மைக்கேற்ப மாற்றை வைத்தார்- காந்திய சோசலிச அறக்கட்டளை மாற்று சிந்தனைகள் போன்றவற்றை ராவ் விரிவாக விவாதிக்கிறார்.

இரண்டாம் பகுதியில் சோசலிசத்திற்கான இந்திய அணுகுமுறை- நேருவின் பார்வை சார்ந்த சோதனைகள், இந்திய சோசலிஸ்ட்கள் பேசிய ஜனநாயக சோசலிசம், இந்திய சோசலிச சோதனையின் சவால்கள்- தோல்விகள் போன்றவற்றை 5 இயல்களில் விவாதிக்கிறார்.

1982ல் இந்நூல் வந்திருந்தாலும், பயமுறுத்தும் கோட்பாட்டு சொற்றொடர்களோ , அலுப்பூட்டும் புள்ளி விவர அடுக்குதல்களோ இல்லாமையால், வாசகருக்கு tired தராமல் நகரும் தன்மையான நூல் எனலாம்.

ராவின் கருத்தாக்கங்களிலிருந்து கொஞ்சம் சொல்லவிழைகிறேன்.

இந்திய சோசலிச சோதனைக்கான அடிப்படை reducing economic inequality without political regimentation , taking lessons from soviet- China etc

Free competition- free enterprise all these are just text book maxims, nothing possible without Govt support

In communist experiments only one employer that is State- no consumer sovereignty. Their also price cost market mechanism , vast differences prevailed. Surplus gone through state for investment, that is the difference.

Regarding planning , you cannot have communism without planning , but you can have planning without communism. The magnitude and disposal of the economic surplus that determines the rate of saving in any society

Democratic socialism does not envisage abolition of private property in all means of production distribution, allows it with public sector.

நீளமாக செல்வதை நிறுத்தி இரு முக்கிய காந்தி விளக்கங்களுடன் இதை முடிக்கிறேன். காந்தி குறித்து பொது புத்தியில் காணப்படும் பலவற்றில் ஒன்று , அவர் கருவிகளுக்கு தொழில்மயத்திற்கு முற்றிலும் எதிரானவர் என்பதும் ஆகும். இங்கு காந்தியின் இரு விளக்கங்களை ராவ் கொடுத்தபடி தந்துள்ளேன்.

If I could produce all my country's wants by means of 30000 people instead of 30 million , I should not mind it, provided that the 30million are not rendered idle and unemployed.

About Machine and Modern Industry

As a moderately intelligent man , I know that man cannot live without industry. Therefore I cannot be opposed to industrialisation. But I have a great concern about introducing machine industry. The machine produces much too fast, and brings with it a sort of economic system that I cannot grasp, I do not want to accept something when I see its evil effects which outweigh whatever good it brings with it.

I want dumb millions of our land to be healthy and happy, I want them to grow spiritually. And yet for this purpose we do not need machine. There are too many idle hands. But as we grow in understanding if we feel the need of machines,we certainly will have them. Once we have shaped our life on Ahimsa, we shall know how to control the machine.

ராவ் தனது வாதங்களை எளிய வகையிலேயே நூல் முழுதும் நகர்த்தியிருப்பது இந்நூலின் சிறப்பு. வெளிவந்து 40 ஆண்டுகளுக்கு மேல் ஆனாலும் விடுதலை இந்திய அரசியல் பொருளாதார கட்டுமான பிரச்சனை குறித்த சவாலை இந்நூல் பேசியிருப்பதைப் பார்க்கலாம்.

10-8-2024

Aug 13

காந்தி தாகூர் விவாதங்கள் குறித்து விவரம் அறிந்தவர்கள் ஏராளம் பேசியுள்ளனர்- எழுதியும் உள்ளனர். 1915-1941க்கால கடிதங்கள், கருத்துக்கள், பதில்கள் என இருவரின் பார்வைகளும் சப்யசாச்சி பட்டாசார்யா அவர்களால் தொகுக்கப்பட்டு 1997ல் என் பி டி வெளியீடாக வந்தது. பல பதிப்புகளைக் கண்ட தொகுப்பு.

சப்யாவின் விரிவான முன்னுரை இருவர் விவாதங்கள் குறித்த பிழிவாக இருக்கும். இந்நூல் தமிழில் வந்திருக்கிறதா என எனக்குத் தெரியவில்லை. வந்திருந்தால் கூடுதல் பலனாக இருந்திருக்கும்.

இத்தொகுப்பில் நமக்கு தரப்படும் காந்தி எழுதிய முதல் கடிதத்திலேயே தாகூரை குருதேவ் என விளித்து அழைத்துள்ளதைக் காணலாம். இக்கடிதம் மோதிகரியிலிருந்து ஜன 21, 1918ல் எழுதப்பட்டுள்ளது. திலகர் காந்திக்கு எழுதிய முதல் கடிதமாக இத்தொகுப்பில் கிடைப்பது ஜனவரி 1915 என உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் தாகூர் அன்புள்ள மிஸ்டர் காந்தி என விளித்திருப்பார். ஜாலியன்வாலா பாக் படுகொலை நேரத்தில் தாகூர் எழுதிய ஏப்ரல் 12, 1919 கடிதத்தில்தான் அவர் காந்தியை அன்பிற்குரிய மகாத்மாஜி என விளித்து எழுதுவதைப் பார்க்கிறோம்.

இங்கு சொல்ல வந்தது இந்தி மொழி பயன்பாடு குறித்து காந்தி தாகூருக்கு ஜன 21, 1918ல் கடிதம் எழுதி கருத்துக்கேட்க, அதற்கு பதிலாக ஜன 24 1918ல் சாந்திநிகேதனிலிருந்து தாகூர் எழுதினார். இக்கடிதங்களின் சாரம் இன்றும் கூட விவாதப் பொருளாக இருப்பதைப் பார்க்கையில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மொழி பிரச்சனை ஒன்றை விவாதித்துள்ளனர் எனக் காண்கிறோம்.

இந்தி சம்மேளனம் இந்தூரில் கூட இருந்த நிலையில் - காந்தி அதில் உரையாற்ற அழைக்கப்பட்ட சூழலில்- சிலகேள்விகளை எழுப்பி முக்கியமான சிலரிடம் கருத்துக்களை காந்தி வாங்கிக்கொண்டிருந்தார். தாகூருக்கும் மூன்று கேள்விகளை அனுப்பி

அவரின் கருத்துக்களை காந்தி கேட்டிருந்தார். இக்கடிதத்திலேயே குருதேவ் என காந்தி விளித்து எழுதலானார் என இத்தொகுப்பு சுட்டுகிறது. தாகூர் பதிலில் அன்புள்ள மிஸ்டர் காந்தி என்று எழுதியதையும் காண்கிறோம்.

காந்தி இந்தூர் இந்தி சம்மேளன உரைக்கு எழுப்பிய கேள்விகள்

1. Is not Hindi (as bhasa or Urdu) the only possible national language for inter provincial intercourse and for all other national proceedings?

2. Should not Hindi be the language principally used at the forthcoming congress?

3. Is it not desirable and possible to give the highest teaching in our schools and colleges thro vernaculars? And should not Hindi-be made a compulsory second language in all our post primary schools?

தேசத்தொண்டர்கள் மக்களுடன் நெருக்கமாக தொடர்புகொண்டு பணியாற்றவேண்டிய சூழலில் மேற்கண்ட கேள்விகள் தீர்க்கப்படவேண்டியது அவசரமாகியுள்ளது என்பதையும் காந்தி தன் கடிதத்தில்சுட்டிக்காட்டியிருப்பார்.

தாகூர் ஜன 24 1918ல் உடனடியாக தன் சுருக்கமான பதிலை தந்தார். தாகூர் பதில் கடிதத்தை நான் புரிந்துகொண்ட அளவில் அவரது கருத்துக்களை கேள்விகளுக்கு தந்துள்ளார். Affirmative answer தான் என்று தாகூர் எழுதியிருந்தாலும் அவர் தன் தயக்கம் எங்கே என்பதை சொல்லாமல் இல்லை.

தாகூரின் கருத்தாக வந்தவை. என் வசதிக்காக நம்பர் இட்டுள்ளேன். அவர் இடவில்லை.

1. Of course Hindi is the only possible national language for interprovincial intercourse in India

2. At the Congress, I think we cannot enforce it for a long time to come.. Hindi will have to remain optional in our national proceedings.

சரி ஏன் காங்கிரசில் கட்டாயப்படுத்தக்கூடாது என்கிற கேள்விக்கும் , எதுவரை optional என்கிற கேள்விக்கும் அக்கடிதத்தில் தாகூரிடம் விளக்கம் இருக்கும்.

ஏன் கட்டாயப்படுத்தக்கூடாது? முதலில் மதராஸ் மக்களுக்கு இந்தி அந்நியமொழி. பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கு இந்தியில் கருத்துக்களை சரியாக வெளிப்படுத்துவதில் கஷ்டம் இருக்கும். அவர்கள் மீது இதில் தவறு இல்லை. பயிற்சி வேண்டும் என்பதால் மட்டுமல்ல, அரசியல் சிந்தனைகள் ஆங்கில வழியில் உள்ளே வந்துள்ளன என்பதாலும் கூட.

எதுவரை optional?

Hindi will have to remain optional in our national proceedings until a new generation of politicians fully alive to its importance, pave the way towards its general use by constant practice as a voluntary acceptance of a national obligation. இந்தியின் அவசியம் உணர்ந்து , அதன் பொதுப்பயன்பாட்டு பயிற்சிக்கு வழிவகை செய்து, தேசத்திற்கு செய்திடும் கடமை , என தானாக முன்வந்து புதிய தலைமுறை அரசியல்வாதிகள் வந்து ஏற்கும்வரை அது optional என தாகூர் கருத்து சொல்லியிருப்பார்.

கல்லூரிவரை தாய்மொழியில் கல்வி சாத்தியமா விரும்பத்தக்கதா, ஆரம்பப்பள்ளி தாண்டிய பிறகு இந்தியை இரண்டாவது மொழியாக கட்டாயமாக்கல் குறித்து தாகூரின் இக்கடிதத்தில் எந்த பதிலும் இல்லாமல் இருக்கிறது.

அனைத்திந்திய அளவில் சந்திக்க கூடியவர்கள் என கணக்கில்கொண்டு இந்த உரையாடல் நடந்துள்ளதாக எடுத்துக்கொள்ளலாம். இன்றுவரை இது மத்திய மாநில அரசு பிரச்சனைகளில் ஒன்றாக, இந்தி பேசாத மாநிலங்களில் ஆங்கில வழியாக என்ற நேரு உறுதிமொழியாக இருப்பதைக் காண்கிறோம்.

இந்தூர் இந்தி சம்மேளனக் கூட்டத்தில் மார்ச் 29, 1918ல் காந்தி உரையாற்றியுள்ளார். அவரது உரையை நூல்தொகை 16 ல் பக் 371 ல் ஆர்வம் உள்ளவர் சென்று அறியலாம்.

13-8-2024

aug 15

சிபிஅய் மகாத்மா ஒரு மதிப்பீடு நூல்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர்கள் சிலரைக்கொண்டு காந்தியின் நூற்றாண்டு சமயத்தில் - குறிப்பாக அக்டோபர் 2, 1969ல் The Mahatma A Marxist Symposium என்கிற நூலைக் கொணர்ந்தனர். என்னிடம் பல ஆண்டுகளுக்கு முன்னர் (சரியாக வருடம் நினைவில் இல்லை) மகாத்மா மார்க்சிய மதிப்பீடு என்கிற தமிழ் நூல் இருந்தது. எனது கவனக் குறைவால் எங்கோ தவறவிட்டுவிட்டேன்.

ஆங்கில நூலை தோழர் எம் பி ராவ் எடிட் செய்திருந்தார். தோழர் ராவ் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்று ஆவணத்தொகுப்புகளிலும் பங்களிப்பை செய்தவர். நூல் பிபிஎச் வெளியீடாக, 1969ல் ரூ 10க்கு வந்தது. தமிழ் நூலான மகாத்மா மார்க்சிய மதிப்பீடு காந்தியின் 150 ஆம் ஆண்டில் மறுபதிப்பாக கொணரப்பட்டிருந்தால், நலமாக இருந்திருக்கும் என எனக்குத் தோன்றியது.

ஆங்கில நூலில் பதிப்பாளர் குறிப்பில் கீழ்கண்ட வரிகள் இடம் பெற்றுள்ளன

The Communist Party too had on occasions sharply clashed with Gandhiji. It could not accept his various theories, nor could it deny his role in the anti-imperialist movement. Between them there was a bitter struggle as, to who would win the masses and for what ideology.

விரிவான ஒன்றாக நூலைக் கொணர திட்டமிட்டு இருந்தோம். நடைமுறை அரசியல் காரணமாக , எழுத ஏற்றுக்கொண்ட சிலரால் கட்டுரைகள் தரமுடியாமல் போனாலும், முக்கிய தலைவர்கள் பலரும் எழுதியிருப்பதை பதிப்பாளர் குறிப்பு காட்டும்.

135 பக்கங்களில் அன்றைய கம்யூனிஸ்ட் தலைவர்கள் காந்தி குறித்த மதிப்பீடு ஒன்றை தரவேண்டும் என்கிற பொறுப்பில் செய்யப்பட்ட நூலாக இதைப்பார்க்கலாம். இதில் 7 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

மகாத்மா நூற்றாண்டு என தோழர் டாங்கே, காந்தியும் சிபிஅய்யும் என சர்தேசாய், விடுதலைக்குப் பின்னர் காந்தியம் என மொகித்சென், தனித்துவ தலைவர் என ஹிரன் முகர்ஜி, 1925ல் காந்தியும் புரட்சியாளர்களும் என மன்மத்நாத் குப்தா, காந்தியும் தேசிய மொழியும் என சுரேந்திர கோபால், நான் அறிந்த காந்தி என ஆனந்த கௌசல்யன் ஆகியோர் இந்நூலில் பங்களித்துள்ளனர்.

காந்தி குறித்த காந்தியானா- காந்தி கிட்டங்கிக்கு கம்யூனிஸ்ட்களின் இந்நூல் மதிப்பீடு மிகச் சிறிய பங்களிப்பு என்றாலும், முக்கிய பங்களிப்பு- critical appreciation literature என்கிற வகையில் ..

ஹிரன் தனித்துவமாக தனி நூல் ஒன்றை எழுதினார். இ எம் எஸ் அவர்களும் அப்போது நியுஏஜ்ஜில் எழுதியவற்றை தொகுத்து தனி நூலாக கொணர்ந்தார். இந்த இரண்டும் மெயின்ஸ்ட்ரீம் கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்கள் இருவரின் மிக முக்கிய பங்களிப்பு. இ எம் எஸ் விட ஹிரன் இன்னும் நெருக்கமாக காந்திய தாக்கத்தை உணர்ந்தவராக தெரிவார். இ எம் எஸ் நூல் முக்கிய ரெஃப்ரன்ஸ் நூலாக பாவிக்கப்படுவதையும் குறிப்பிட வேண்டும். இவர்கள் அனைவருக்கும் முன்பாகவே சோசலிஸ்ட் இதழ் நடத்திய தோழர் டாங்கே 1921 லேயே காந்தி லெனின் ஒப்பீட்டு நூலைக் கொணர்ந்து பெரும் முதல் பங்களிப்பை செய்தார். இன்றும் பேசப்படும் நூல் அது. டாங்கே எழுதிய அந்நூலின் நூற்றாண்டு நேரத்தில் அந்நூல் குறித்து விரிவான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். உங்கள் நூலகம் அதை வெளியிட்டிருந்தனர்.

காந்தி குறித்து 'காந்தியைக் கண்டுணர்தல்', தோழர் காந்தி என்கிற இரு நூல்களை என் வாசிப்பு மற்றும் புரிதலில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் கொணர்ந்தேன். இணையத்தில் எவரும் வாசிக்ககூடிய மின்

நூல்களாக அவை இருக்கின்றன. இந்நூல்கள் தனித்த ஆர்வம் காரணமாக எழுதப்பட்டு வந்தவை. ஏராள விவரங்களை கொண்ட நூல்கள் அவை. conceptual சாரமும் இருக்கும்.

1969 The mahatma நூல் குறித்து சில செய்திகளைப் பார்ப்போம்.

காந்தி குறித்து எம் என் ராய் காலம்தொட்டு சொல்லப்படும் அதே குற்றச்சாட்டுகள் இந்நூலிலும் காணப்படும். அவர் மறைபொருள்வாதி, மத்தியகாலத்தவர், ஏகாதிபத்திய நிலபிரபுத்துவ சக்திகளுடன் சமரசம் செய்துகொண்டவர், geneuine revolutionary action யை தடுத்தவர், அவர் எவ்வளவு நேர்மையானவராக இருந்தாலும் பூர்ஷ்வா வர்க்க தலைமைகொண்டவர், மக்கள் திரட்சியை உருவாக்கினாலும் அதைக் கட்டுக்குள் நிறுத்தி வைத்தவர்

சர்தேசாய் எழுதும்போது

The CPI could never grasp Gandhi and Gandhism in their totality. They always eluded such a grasp, and in that sense remained an enigma for us, all our cocksureness not withstanding

ரஜினி பாமிதத் மதிப்பீடாக சர்தேசாய் தருவது

"Gandhi failed as the leader of the national struggle be

cause he could not cut himself loose from the upper-class

interests and prejudices in which he had been brought up... The 'spirituality' of Gandhi is only the expression of this class interest. All parasitic and propertied classes have to weave around themselves a fog of confused language, supersti tion, tradition, religion, revivalism, etc. in order to hide from the masses the fact of their exploitation."

காந்தியின் அகமதாபாத் பஞ்சாலை தொழிற்சங்க முறை உண்மையான தொழிற்சங்க இயக்க முறையாகாது என்ற குற்றச் சாட்டும் இதில் காணப்படும்.

சக்லத்வாலா- காந்தி கடித சாரமும் சுட்டிக்காட்டப்படுள்ளது. காந்தியின் பதிலில் காணப்படும் முக்கிய அம்சம்

I regard you as a fellow seeker after truth. . . It is not

given to all of us to agree with one another in all our

opinions; but it is given to every one of us to tender the

same respect for the opinions and actions of our fellows as we expect for our own

சர்தேசாய் இருவிதமான காந்தி குறித்த மதிப்பீடுகளை இக்கட்டுரையில் முன் வைத்திருப்பார். இந்நூலின் சாரமாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

On the one hand, Gandhi's theistic ideology and tenets

expressed through his creed to truth, nonviolence, love, re nunciation, selfpurification, the inner voice, change of heart, trusteeship, etc. were the expression of India's socioeconomic backwardness, and more particularly the backwardness and superstition of the Indian peasant masses. Hence, they were antiquated and unscientific. Inevitably they were inadequate from the standpoint of the ideological demands of a full de velopment of India's revolutionary anti-imperialist struggle.

In the ultimate analysis, they were harmful, as all supersti tion and faith in divine guidance are harmful for an uncompromising revolutionary struggle

On the other hand, in the given historical conditions, the

same social, ethical and philosophical ideas expressed the

yearnings and aspirations of tens of millions of the Indian people awakened to new life and struggle against the domination and miseries of foreign rule (e.g. such declarations and writings of Gandhi as, "This Satanic government cannot be mended, it must be ended"; "God dare not appear before the poor except in the form of bread", etc.).

And what is even more important, in practice the ideas

took the form of hartals, mass noncooperation, satyagraha,

civil disobedience and so on, i.e., mass protest actions against imperialism. These surely were not revolutionary forms of struggle, but history has proved that, nonetheless, they were powerful and effective forms of struggle in our freedom movement.

காந்தி கம்யூனிஸ்ட்களிடம் ஒன்றுபடும் இடத்தையும் வேறுபடும் இடத்தையும் சுட்டிக்காட்டத்தக்க ,ஹரிஜன் இதழில் வந்த (1937 மார்ச் 13) மேற்கோளைத்தருகிறார்.

"What does communism mean in the last analysis? It means a classless society–an ideal that is worth striving for. Only I part company with it when force is called to aid for achieving it."

இ எம் எஸ் எழுதிய மகாத்மாவும் இசமும் கூட அவரது தனிப்பட்ட முயற்சி, கட்சி ஆவணமல்ல என்று இக்கட்டுரையில் சர்தேசாய் குறிப்பிடுகிறார்.

இக்கட்டுரையை முடிக்கும்போது தோழர் சர்தேசாய் முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பி இவ்வாறு முடித்திருப்பார். ஒருவேளை காந்தி வெறியனின் குண்டுக்கு பலியாகாமல், விடுதலை இந்தியாவில் வாழ்ந்திருப்பார் ஆனால், அவர் ஏழைகளின் பக்கமே நின்றிருப்பார். நாம் நினைக்கும் வழியில் இல்லாமல் போகலாம், அவர் கருதும் வழியில் பணக்கரர்களுக்கு எதிராக ஏழைகளுடன் அவர் நின்றிருப்பார் என சர்தேசாய் சொல்கிறார்.

மொகித்சென் மதிப்பீட்டில்

If Gandhiji was opposed to the mad rush of capitalist industrialisation he was no less opposed to its real negation- working-class socialism

Expressing an impossible dream, opposing independent action by the peasants and thwarting the possibility of working-class leadership, Gandhism inevitably handed over India to the capitalist class, to those who grew in the shadow of the Mahatma, as Birla lovingly puts it.

It is, of course, necessary to remember the achievements of Gandhiji. There is no doubt that he was the foremost anti-imperialist leader produced by our mass struggle for free dom. It was he who accomplished the mass turn of the peasantry to the national movement and who built the Congress into the anti-imperialist, organised front extending into every village and town. It was he who strove for Hindu- Muslim unity, for the realisation of Indian unity based on the recognition of its diversity. It was he who brought dardranarayana, the harijan, to the centre of the national conscience. It is not these accomplishments that one is doubting when one critically examines the source and the consequence of his ideology

1969ன் மொகித்சென் இப்படி ஒரு மதிப்பீட்டையும் தன் கட்டுரையில் தந்துள்ளார்

Nobody benefited from the Gandhi-Nehru leadership than the Indian industrial national bourgeoisie

மேலும் மொகித் எழுதுகையில் காந்தியின் நேர்மறையான சாராம்சங்களை (கம்யூனிஸ்ட்கள் நினைக்கும்) கம்யூனிஸ்ட்களே எடுத்துச் செல்கின்றனர். இதனால் அகிம்சைக்கு மாறிவிட்டோமா என்றால் இல்லை என எழுதியிருப்பார். அவ்வரிகள்

which is the force in India that carries forward today that is positive in the heritage of Gandhism? It is none other than the left, and in the first place, the communists. Here we have an example of sublation, to use a Hegelian term. It is a case of a carry-forward by negation. Does it mean that the left and the communists have become converts to the creed of nonviolence? Very far from it.

மேலும் நீள்வதை நிறுத்துகிறேன். வாய்ப்புள்ளோர் வாசித்துப் பார்க்க சிறிய தூண்டுதலை இந்த இடுகை செய்தால் நலம்.

இதில் எழுதிய தலைவர்களின் கட்டுரைகள் காந்தியின் நூறு வால்யூம் தொகுப்புகள் முறைப்படுத்தி (1958-1994) வருவதற்கு முன்னர் எழுதப்பட்டவை. ஏராள காந்திய ஆய்வுகள் உலகளாவிய அறிஞர்கள் பார்வையில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் காலமிது.

விரிவான காந்திய வாசிப்பு கொண்டவர்கள் இங்கு பேசப்பட்டுள்ள கருத்துக்களுடன் மாறுபடலாம். காந்தியை மகத்தான புரட்சிகர ஆளுமையாக பார்த்த ஆய்வுகளும் ஏராளம் இருக்கின்றன. தேடிச் செல்வோர்க்கு மாபெரும் திறப்பாக காந்தி அமைவார்.

15-8-2024

Aug 16

இறை உலகில் மும்மூர்த்திகள் பிரம்மா விஷ்ணு சிவன் என்கிற ஆத்திக ஐதீகம் ஒன்று கருத்தாளுமையாக இருக்கிறது. இந்த மும்மூர்த்தி பொருத்தங்களை இணைத்து derive செய்து தரக்கூடிய குணம் நம் சமூகத்தில் இருந்து வருகிறது. அவரவர்க்கு பிடித்த துறையில் இருக்கும் top threeகளை மும்மூர்த்திகள் என்கிற பிராக்கட்டில் அடைக்கலாம்.

முன்பு நான் இருந்த ஊரில் சங்கீத மும்மூர்த்திகள் - தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர்- அறியப்பட்டனர். அவர்கள் பெயரில் சபா ஒன்றும் கச்சேரிகளை நடத்துவதற்காக இருந்தது.

காங்கிரஸ் விடுதலை காலத்தில் காந்தியுடன் நேரு படேல் இணைந்து மும்மூர்த்தி செல்வாக்கில் இருந்தனர். இங்கு திராவிடத்தில் பெரியாருடன் அண்ணா கலைஞர் என்கிற மும்மூர்த்தி (திராவிடத்தில் மூர்த்தி என்கிற சொல்லாட்சி ஏற்கப்பட்டால்- அங்கும் தட்சிணாமூர்த்திகள் உண்டு என்பதையும் கொண்டால்) தேர்தல் அரசியல் வட்டாரத்தில் ஏற்கப்படலாம்.

கம்யூனிஸ்ட்களிடம் இப்படியான மும்மூர்த்திகளாக சோவியத் புரட்சிக்குப் பின்னர் மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் ஆக்கப்பட்டனர். மாவோ சீனா உருவானபின் இதில் அவரும் சேர்ந்தார். சிறுவயதில் கரந்தை தஞ்சையில் திமுக பிரமுகர்கள் இல்லத்தில் போட்டோ ஒன்றில் பலவகை உருவம் கொடுக்கும் திமுக தலைவர்கள் படம் பார்க்கக் கிடைக்கும்.

சோசலிச இயக்கத்திலும் ஜேபி ஆச்சார்ய நரேந்திர தேவா லோகிய என்கிற மும்மூர்த்திகளை பிராக்கட் செய்ய முடியும்.

லோகியா குறித்து ஆயிரக்கணக்கான பக்கங்கள், தேடுகிறவர்களுக்கு கிடைக்கும். சற்று சிடுமூஞ்சி, கோபம் சட்டென வந்துவிடும் என்றாலும், ஒத்துப்போகிற தோழர்களுடன் சிரிக்க சிரிக்க பேசுகிற அலாதி குணமுண்டு. லோகியா ஏராளம் எழுதியிருக்கிறார். ஜனதா

இதழ் சோசலிஸ்ட்களால் நடத்தப்பட்டு வரும் இதழ். மது தந்தவதே , சுரேந்திரா போன்ற புகழ் வாய்ந்த சோசலிஸ்ட்கள் எடிட்டராக இருந்துள்ளனர். திருவாரூரில் பல ஆண்டுகள் வந்த வார இதழ்களை, ஆண்டுவாரியாக தீனன் என்கிற தோழர் அழகாக பவுண்ட் செய்து கொண்டு தருவார். எல்லாம் என் போலவே பரண் மீது போய் காலத்தூசியில் சிக்கிக்கொண்டன.

லோகியா குறித்த ஜனதா சிறப்பிதழ் அவரின் சில முக்கிய கட்டுரைகளை தாங்கி வந்தன. லோகியா காந்தியை எப்படிப் பார்த்தார் என கட்டுரை ஒன்றும், அவரின் அரசியல் பொருளாதார பார்வை குறித்து சற்று நீண்ட கட்டுரை ஒன்றும் வலைப்பூவில் முன்னர் எழுதியிருந்தேன்.

லோகியா எவ்வளவு கோபமான வார்த்தைகளை பேச்சிலும் எழுத்திலும் வீசியிருந்தாலும் அவர் சிந்தனைகள் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகவே எனக்குப்படும். பெர்லின் கல்லூரி வாசம் மூல ஜெர்மன் மொழியிலேயே மார்க்ஸ் எங்கெல்ஸ் நூல்களை அவர் படிக்க உதவியது. அய்ன்ஸ்டின் உட்பட பல புகழ்வாய்ந்தவர்களுடன் அவர் விவாதித்தவர்.

விடியல் பதிப்பகம் லோகியா essential of Lohia என்பதை எடுத்துக்கொண்டு தமிழில் விரிவான நூல் ஒன்றை சில ஆண்டுகளுக்கு முன்னர் கொணர்ந்தனர். ஆங்கிலத்தில் லோகியா எழுத்துகளுக்கு போகமுடியாது என நினைப்பவர் அதில் ஓரளவு நிறைவு பெறலாம்.

மார்க்ஸ் ஈர்ப்பை போலவே காந்தி ஈர்ப்பும் லோகியாவிடம் இருந்தது. அதே நேரத்தில் மார்க்சிடம் காந்தியிடம் எதையெல்லாம் தன்னால் ஏற்க முடியாது என்கிற வெளிப்படை பார்வையும் அவரிடம் இருந்தது. நேருவிடம் ஆரம்ப காதலும், விடுதலைக்கு பின்னர் பெரும் மோதலும் கொண்டவராக லோகியா இருந்தார். ஜேபியுடன் அன்பும் மோதலும் இருந்தது. சாதி குறித்து கணக்கில் கொண்டு உரக்க

பேசியவர் லோகியா. மார்க்ஸ் காந்தி பொருளாதாரம் குறித்து விரிவாக எழுதியவர். காங்கிரஸ் சோசலிஸ்ட், சோசலிஸ்ட், பிரஜா சோசலிஸ்ட் என பல கட்சி சோதனைகளை நடத்தியவர். இந்தியின் அவசியம் பற்றி பேசி வந்தவர்.

மணமாகாதவர்- பெண் உணர்வு அற்றவர் அல்ல என அவர் குறித்த செய்தி உண்டு. என் வாழ்க்கையே நிச்சயமற்ற நிலையில் எனக்கு மணவாழ்க்கை தேவையில்லை என முடிவெடுத்தவர்.

Neither Marxist Nor Anti Marxist

Neither a Gandhiite nor Anti Gandhiite என தன்னை வரையறுத்துக்கொண்டவர் லோகியா. நேரு போன்றவர்களை அரசு காந்தியர் Govt Gandhians என அவர் கேலி பேசினார். இங்கிலீசையும் சாதியையும் பிடுங்கிட்டால் போதும் இந்தியா சமூகம் இளகும் என அவர் பேசி வந்தார்.

ருஷ்ய மார்க்சியம் மீதான விமர்சனத்தில் ஒன்றாக when a seer gets corrupted he becomes a tyrant என அவர் பேசினார். காந்தியை அவர் வரலாற்றின் திசைகாட்டி எனக் கருதினார்.

மனிதனுக்கு கடவுள் மீதும் பெண் மீதும் நீங்கா காதல் உள்ளது. நல்லவேளை நான் கடவுளை சந்தித்ததில்லை. என்னை ஏற்றுக்கொண்ட பெண் என எவரையும் சந்திக்கவில்லை என்றார் லோகியா. பெண்களை மதிப்பிடுவதில் sexual purity என்பது மட்டுமே ஏன் அளவுகோலாக இருக்க வேண்டும் என்கிற குரல் அவரிடம் இருந்தது.

ராம் கிருஷ்ணா சிவா என்கிற மூன்று இறை ஆளுமைகள் குறித்தும் அவர் எழுதியுள்ளார் .

கன்னியாகுமரி வந்தபோது விவேகானந்தர் நிற்கிற திசை பார்த்து, சாகும்போது அவர் எந்த திசை நோக்கி செத்தார் எனத் தெரியுமா கடல் பக்கமா நிலப்பக்கமா என்கிற கேள்வியை எழுப்பினார். உலகு

நாடாளுமன்றம் உலக அரசாங்கம் என மானுடன் ஒன்றுபடுவானா என்கிற சிந்தனையை அவர் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

உங்கள் வாழ்க்கை தத்துவம் என்ன என அவரிடம் கேட்டபோது evergreen life அதற்கு மேல் என்ன என மிக practical ஆன பதிலைத் தந்தார்.

நேருவிற்கு பின்னர் யார் என்கிற கேள்வி வந்தபோது , மிகவும் Casual ஆக,வேறு யார் அவர் பெண்தான் என்ற கமெண்ட் கொடுத்தவர் லோகியா.

உண்மை மட்டும் போதாது , அது நிற்க பலம் வேண்டும். பலவீனமான உண்மை கரை சேராது. ரொட்டியும் சுதந்திரமும் ஒன்றுதான் . எனக்கு அரசு அதிகாரம் வேண்டாம், எனது கருத்துக்களே பலமாகட்டும் எனப் பேசியவர் லோகியா.

மக்கள் என்னை செவிமடுக்கிறார்கள். இறந்த பின்னரும் லோகியாவைத் தேடுவார்கள் என்கிற தன்னம்பிக்கை அவரிடம் இருந்தது. லோகியா வாசிப்பும் நவீன இந்திய கட்டுமானம் குறித்த அறிதலுக்கு தேவையானது.

16-8-2024

aug 16

Com Hiren Mukherjee wrote so about Gandhi in The Mahatma Book 1969

Even before there was a properly organised and functioning Communist Party in India, Gandhi had come to be the leader and the symbol-of India’s struggle for freedom...

It is no wonder that President Ho Chi Min, leader of Viet nam whose heroism has cast a new radiance on history, said in Delhi some years ago that it was “a wrong question” when pressmen asked him to compare his role in Vietnam with that of Gandhi in India, which he thought would be “foolish”, but added: “I and others may be revolutionaries but we are disciples of Mahatma Gandhi, directly or indirectly: nothing more, nothing less.” Too much meaning need not be read into this obvious extempore statement, but it remains significant. Communists differ from him drastically, but our salute to him is sincere. He did not fulfil all our expectations, but he was unique, representing uniquely this

India of ours which stands, as it were, between an immense past and an even more immense future.

aug 17

சிபிஅய் தலைமையின் 1969 மகாத்மா ஒரு மதிப்பீடு -பிபிஎச் ஆங்கில வெளியீடு குறித்து முன்னர் ஒரு இடுகை செய்திருந்தேன. அதில் மிகவும் வித்தியாசமான பதிவாக ஆனந்த கௌசல்யன் அவர்களின் பதிவு அமைந்திருக்கும். நான் அறிந்த காந்தி என்கிற சிறிய பதிவு அது. வார்தாவிற்கு ஆனந்த கௌசல்யன் சென்றபோது அங்குள்ள நடைமுறைகளைக் கண்ணுறுகிறார்.

சாப்பாடு என்றால் குறித்த நேரத்தில் மணி அடிக்கப்படும். தவறவிடுபவர்கள் காத்திருக்க வேண்டும். சாப்பிட்டு முடித்தவுடன் அன்றைக்கான உடல் உழைப்பை சிறிது நேரமாவது தரவேண்டும்.

கௌசல்யனுக்கு வேறு பம்பாய் அனுபவம் உண்டு. அங்கு ராகுல் சாங்கிருத்தியாயன் மற்றும் மகேந்திரா போன்ற தோழர்களுடன் ஏற்பட்ட அனுபவமது. சாப்பாட்டிற்கு அந்த குறித்த நேரத்தில் வரமுடியாதவர்க்கு தனியாக தட்டுகளில் அவர்களுக்கான உணவு எடுத்து வைக்கப்படும். அவர்கள் விருப்ப அல்லது எப்போது நேரம் கிட்டுகிறதோ அப்போது வந்து சாப்பிட்டு செல்லலாம்.

வார்தாவில் அவ்வாறு இருக்காது. கௌசல்யனுக்கு சாப்பிட்டால் சிறிது ஓய்வு எடுக்க வேண்டும். ஓய்விற்கு பின் என் வேலை என்ன எனக்கேட்டால், அந்த வேலை முடிந்துவிட்டது என்கிற பதில் கிடைக்கும். எனவே கௌசல்யன் சாப்பாட்டிற்கு முன்னரே போய் வேலை செய்துவிட்டு சாப்பிடுகிறேன் என்கிற அனுமதியை பெற்றுக்கொண்டார். கொடுக்கப்பட்ட வேலை தான்யங்களை சுத்தப்படுத்தி தருகிற வேலை.

காந்தி எப்பவும் எவராவது வந்தால் சந்தித்தல், எழுதுதல், விவாதித்தல் என படு சுறு சுறுப்பாக இருப்பார். அன்று சுசிலா வந்து அவரின் மௌன அனுசரிப்பு என்பதை நினைவூட்டினர். அதை அறியாமல் எவராவது பேச்சுக்கொடுத்தால் அவர் இருவிரல்களால் வாயை பொத்தி மௌனம் என்பதை தெரிவிப்பார். கௌசல்யன் காந்தியிடம் கேட்கிறார்- வாய்க்குத்தானே மௌன விரதம் , காதுக்குமா என்கிறார். மெலிய சிரிப்பு உதித்து இரு காதுகளையும் காந்தி பொத்திக்கொண்டு தன் நகைச்சுவை உணர்வைக் காட்டுகிறார். ஆஹா இதை கிளிக் செய்ய எவரும் இல்லையே என கௌசல்யன் ஆதங்கப்பட்டு எழுதுகிறார்.

காந்தி பம்பாய் செல்லவேண்டிய வேலை. கௌசல்யன் காந்தியிடம் சொல்கிறார். நீங்கள் வித்தியாசமான மனிதர். விருந்தினர்களை விட்டுவிட்டு நீங்கள் உங்கள் வேலைக்காக போய்விடுகிறீர்கள் என்றார். காந்தி பதிலாக இவ்வீட்டுக்கு வரும் விருந்தாளி இதை அவர் வீடாகவே பாவிக்கும் பழக்கம் பெற்றுவிடுவார். அப்படி உணர்பவர்கள் மட்டுமே இங்கு விருந்தாளியாக வருவர் என்கிறார்.

போய்விட்டு என்று வருவீர்கள் என காந்தியை கௌசல்யன் கேட்கிறார். பம்பாயில் சுத்தமாக உள்ளே இளநீர் சொட்டுக்கூட இல்லாத தேங்காய் கிடைக்கும் தெரியுமா என காந்தி கேட்டுவிட்டு, ஜின்னாவை பார்க்கப் போகிறேன், அப்படி ஒரு தேங்காய் கொடுத்தால் உடன் திரும்பு விடுவேன் என்கிறார்.

கௌசல்யன் நானும் பம்பாய் வரவேண்டும் என்கிறார். வரலாம் மூன்றாம் வகுப்பில் என்னுடன், ஆனால் மிகச் சௌகரியமாக இருக்கும் என்கிறார். கௌசல்யன் சௌகரியம் என்பதை 'காந்தி கிளாஸ்' என கிண்டல் செய்து விளக்குகிறார். தூய படுக்கை கிடைத்தது என்கிறார்.

காந்தியிடம் நகைச்சுவையிலும் பொல்லாத்தனம் உண்டு. கௌசல்யனை சுவாமி என்று அழைப்பர். ஆசிரமத்தில் புத்தமும் சிலோனும் என்கிற உரையாற்ற வேண்டினர். சுவாமிக்கோ ஆசிரமத்தில் காந்தியின் உரை ஒன்றை கேட்க விருப்பம். கௌசல்யன் உரைக்கு காந்தி வர அவருக்கு நேரம் இருக்குமா தெரியாது என சிலர் அவரிடம் தெரிவித்தனர். காந்தி வந்தார். சாப்பிட செல்கையில் சுவாமிக்கு அருகில் அமர்ந்தார். சுவாமி ஏன் திருவோட்டில் சாப்பிடுகிறார் என கேள்வி ஒன்றை ஒருவர் எழுப்பினார். அதுவா எவராவது தாக்க வந்தால் தலையில் வைத்து காத்துக்கொள்ளத்தான் என காந்தி பதில் தந்து சிரிக்க வைத்தார்.

காந்தியை பாபு என நான் கூப்பிடுவது ராகுல் சாங்கிருத்தியானுக்கு பிடிப்பதில்லை என்கிற பதிவையும் ஆனந்த கௌசல்யன் தந்திருப்பார். கௌசல்யன் பெரும் ஞானஸ்தர். புத்தம் குறித்த ஞானி. அம்பேத்கர் இயக்கங்களுக்கு உதவிகரமாக இருந்தவர்.

கௌசல்யன் பதிவு இப்படித்தான் முடிந்திருக்கும். அப்புத்தகத்தின் இறுதி வரிகளாகவும் அவை அமைந்தன.

There has been only one true follower of Gandhism and he was Bapu himself. The rest of us can merely celebrate Gandhi centenary, but not advance the cause of Gandhism in the least..

உண்மையான வரிகளோ...

aug 17

தோழர் ஜீவாவின் முழு திரட்டை என் சி பி எச் 2007 ல் கொணர்ந்தார்கள். இரு பாகங்களாக 1938 பக்கங்களில் கொணரப்பட்ட அத்தொகுப்புகளுக்கு பேரா அரசு பதிப்பாசிரியர்.

2002ல் சந்தியா பதிப்பகம் ஜீவாவின் கட்டுரையான 'ஈரோட்டுப் பாதை சரியா' என்பதை சிறு வெளியீடாக பேரா அரசின் முன்னுரையுடன் கொணர்ந்தனர். சுயமரியாதை இயக்கத்திலிருந்து , காங்கிரஸ் சோசலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சி என பயணித்த ஜீவா, சுயமரியாதை இயக்கம்- பெரியாரின் கருத்துக்களை முன்வைத்து இதில் எதிர்வினையாற்றிருப்பார். அதில் உப்பு சத்தியாகிரகத்தை பெரியார் ஏற்காததை ஜீவா சுட்டிக்காட்டியிருப்பார்.

பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறையை கண்டித்து தீர்மானம் போடவேண்டும் என சில சுய மரியாதை இயக்க இளைஞர்கள் கோரியபோது, ஆர்.கே சண்முகம் அவர்கள் தலைவராக தனது தீர்ப்பைச் சொன்னார். சுயமரியாதை இயக்கம் 'அரசியலில் கலக்கலாமா' என்ற முடிவு இருந்தால்தான் தீர்மானத்தையே எடுத்துக்கொள்ள முடியும் என்றார். பெரியார் உடனே சு.ம.இ 'அரசியலில் கலக்ககூடாது' எனச் சொன்னதால் , தீர்மானத்திற்கு இடமில்லாமல் போனதை ஜீவா இதில் சுட்டிக்காட்டியிருப்பார்.

அரசியலில் பங்கேற்பதில்லையானால், நீதிக்கட்சி வெற்றிக்கு (காங்கிரஸ் தேர்தலில் பங்கேற்கும் முன்னர்) பெரியார் காரணம் எனச் சொல்வது சரியாகுமா என்கிற தொனியிலான கேள்வியை ஜீவா இதில் எழுப்பியிருப்பார்.

1932 தஞ்சை மாநாட்டில் வருத்தமுற்ற முனுசாமி நாயுடு விலக நேர்ந்தது. பொப்பிலி அரசரை நீதிக்கட்சி தலைவராக்கியதுடன், முதலமைச்சரும் ஆக்கினர். இவருக்கு சுயமரியாதைக்காரர்கள் தஞ்சையில் ஆதரவு தந்ததை கேள்விக்குள்ளாக்குவார் ஜீவா.

குடியரசுப் பதிப்பகம் சோசலிசம், உழைப்பாளிகளுக்கு ஏன் உலகமில்லை என்ற சிறு நூல்களை நரசிம்மன், சிவசாமி ஆகியோர் எழுதி வெளியிட்டது. இருவரும் ஆரியர்கள் . இது ஆரிய சூழ்ச்சி எனப் பெரியார் அப்போது நல்லவேளை சொல்லவில்லை என்கிறார் ஜீவா.

பொப்பிலி நீதிக் கட்சி ஆட்சியில்தான் பெரியார் எழுதிய 'இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டும்' என்பதற்கு பெரியார் தண்டிக்கப்பட்டார் என்கிற செய்தியையும் ஜீவா இதில் சொல்கிறார்.

ஈரோட்டில் பெரியாரை சந்தித்த ஜெயப்பிரகாஷ் நாராயணனிடம், சுயமரியாதை இயக்கத்தை காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைக்க ஒப்புக்கொண்டார் என்ற செய்தியை (என்றைய தேதி எழுத்து பூர்வ ஆதாரம் என ஜீவா இதில் தரவில்லை) ஜீவா இந்த நூலின் 23 ஆம் பக்கத்தில் தந்துள்ளார். ஜெயப்பிரகாஷ் அவர்களை சந்திக்கும்படி ஜோலார்பேட்டையில் இருந்த ஜீவாவிற்கு தந்தியும் அனுப்பினாராம் பெரியார்.

பெரியார் ஏற்ற இணைப்பு நடை பெறவில்லை. இரண்டே நாட்களில் பெரியார் மாற்றிக்கொண்டுவிட்டார். 'காங்கிரஸ் மேனியா' வில் சில வாலிபவர்கள் இருக்கிறார்கள் என விமர்சிக்கலானார். இவ்விடத்தில் ஜீவா "ஷனச்சித்தம் ஷனப் பித்தம்" 'பெரியார்'களிடம் உண்டு என எழுதியுள்ளார்.

காங்கிரஸ் எதிர்ப்பில் நின்று சோசலிசம் எதிர்த்த ஆர் கே ஷண்முகத்தையும், சுயமரியாதை இயக்கத்தை கேலி பேசிய நாயுடுவையும் பெரியார் ஆதரித்தார். இதை ஜீவா விமர்சித்தார்.

பகத்சிங் 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' எழுத்தை ஜீவா மொழிபெயர்க்க, ஈ வெ கிருஷ்ணசாமி வெளியிட இருவரும் கைது செய்யப்பட்டனர். பொப்பிலி ஆட்சிதான்.

இங்கு ஜீவா எழுதுவது

“ சர்க்கார் (பிரிட்டிஷ்) அழிவு நடவடிக்கையைக் கண்டு ஈவெரா மிரண்டார். ஆர் கே சண்முகம் போன்றவர் தருணத்தைத் தவறவிடாமல் செயல்பட்டனர். உள்நாட்டு மந்திரி பன்னீர்செல்வம், சி டி நாயுடு மூலம் நாஸ்திக பொதுவுடைமை பிரச்சாரத்தை நிறுத்திவிட வேண்டும், இல்லாவிட்டால் கட்சியை சர்க்கார் அழித்துவிட முடிவு கட்டிவிட்டதென்றும் ஈவெராவை மிரட்டிய கதையும் நமக்குத் தெரியும்”

“ என்னை (ஜீவாவை) மானங்கெட்டத்தனமாக மன்னிப்பு கொடுத்துவிட்டு வெளியே வரும்படி ஈவெரா , கே எம் பாலசுப்பிரமணியம் மூலம் கடிதத்தை சிறைச்சாலைக்கு அனுப்பி கட்டாயப்படுத்தினார் (அக்கடித ஆவணம் இந்த நூலில் ஜீவாவால் இணைக்கப்படவில்லை) . ‘பெரிய நாயக்கர்’ வேண்டுமானால் மன்னிப்புக் கொடுத்துவிட்டு போகட்டும், தான் முடியாதென்றும் பிடிவாதமாக கூறினேன். நான் மன்னிப்பு கொடுக்காவிட்டால் இயக்கம் அழிக்கப்பட்டுவிடும் என்றும், இது சர்க்கார் சட்டத்தை நன்கு அறிந்த ஆர் கே ஷண்முகம்கருத்து என்றும், தானே மன்னிப்பும் பொறுப்பும் என்றும் குடியரசில் எழுதிவிடுவதாக ஈவெரா பாலசுப்பிரமணியம் மூலம் கட்டாயப்படுத்தினார்”

“ இந்த நிலையில் சு.ம.இயக்கம் ‘நாட்டில் குழப்பத்தை உண்டாக்கும் கொள்கையுடைய பொது உடைமை இயக்கமல்ல’ என்று அரசாங்கம்

நம்பும்படி ஏதாவது செய்ய வேண்டியதாயிற்று “ என ஜீவா இதை முடித்திருப்பார். இந்த செய்தி பக் 26ல் இந்த சிறு நூலில் இருக்கிறது. இங்கு ஜீவா - நேரிடையாக மன்னிப்பு எழுதிக் கொடுத்தாரா, என்ன எழுதிக்கொடுத்தார் என்பதை சொல்லவில்லை . ‘ஏதாவது செய்யவேண்டியிருந்தது ‘ என்கிற பதிவை அவர் செய்திருப்பார்.

பெரியார் ‘மத்திய சர்க்கார் தலையில் பழியைப்போட்டு’,

மாகாண ஜஸ்டிஸ் கட்சியின் குற்றவாளித்தனத்தை மறைத்ததாக ஜீவா எழுதியிருப்பார். இங்கு கடுமையான விமர்சனங்களை ஜீவா வைப்பதைக் காணலாம்

1935 மார்ச் 10 ல் பெரியார் விட்ட அறிக்கைப்பற்றியும் ஜீவா கடுஞ்சொற்களால் பேசியிருப்பார். காங்கிரஸ் ஆட்சியைவிட பிரிட்டிஷ் ஆட்சியே மேலானது என்பது என்னுடைய வெகுநாளைய அபிப்பிராயம் என இதில் பெரியார் தெரிவித்திருந்தார்.

பக் 28ல் ஜீவா எழுதுகிறார் " ஈவெரா மன்னிப்புக் கொடுத்த பிறகு , உண்மையான சுயமரியாதை தர்மிகள் ஈவெரா தலைமையை வெறுத்தனர்..."

திருத்துறைப்பூண்டி மாநாட்டில் ஜீவா பெரியாரை விமர்சித்து வெளியேறினார். சுயமரியாதை சமதர்ம கட்சியை தொடங்கினார். இக்கட்சியின் திருச்சி மாநாட்டிற்கு 1936 நவம்பரில் டாங்கே வந்து உரையாற்றியுள்ளார். பின் அது காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்தது. இங்கு ஜீவா 'பெரியார் மன்னிப்பு கொடுத்த பிறகு' என எழுதுவதைப் பார்க்கிறோம். (பெரியாரிய தோழர்கள் பெரியார் மன்னிப்புக் கேட்டதற்கு ஆதாரம் இருக்கிறதா எனக் கேட்டு வருகின்றனர்)

இந்த கையேட்டில் பெரியார் தமிழ் நாட்டின் ஜின்னா ஆனார் என்ற விமர்சனத்தையும், அம்பேத்கர் ஜின்னா தயவை நாடி காங்கிரசை எதிர்க்க வட நாட்டிற்கு காவடி எடுத்தார் எனவும் ஜீவா விமர்சிக்கிறார். 'துரோகி எம் என் ராயுடன் ' ஈவெரா ஆருயிர்த் தோழனானதைச் சொல்கிறார். ஈவெரா 'தமிழ் நாட்டின் எம் என் ராய்' ஆகிவிட்டார். ஏகாதிபத்திய பரம்பரை பக்தர்களின் ஜஸ்டிஸ் கட்சி தலைவரான பின் அதைத்தான் செய்யமுடியும் என கடுமையாக விமர்சனம் செல்கிறது.

மேலும் சென்னை கவர்னர் சர் ஆர்தர்ஹோப்பின் அந்தரங்க நண்பரும் ஊழியரும் ஆனார் ஈவெரா. கவர்னரை தலைக்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆடினார்கள் என ஜீவா எழுதியுள்ளார்

இறுதியாக ஜீவா இக்கட்டுரையை இப்படி முடித்திருப்பார்

“ ஈரோட்டுப் பாதையின் இருபது வருட சரித்திரத்தை எனது கட்டுரையில் குறிப்பிட்டு வந்துள்ளேன். அந்தச் சரித்திரம் எடுத்துக் காட்டுவதென்பது ஈவெரா என்றும் சமூகப் புரட்சிக்கு விஞ்ஞானியாக பாதை காட்டியதில்லை..புரட்சி கட்சிகளின் நடவடிக்கைகளை எதிர்த்து வந்திருக்கிறார். ஜனநாயக ஸ்தாபனங்களைத் திருத்துவதற்குப் பதில் அழிக்க முற்பட்டிருக்கிறார்..இந்நாட்டில் பிற்போக்கு சக்திகளான ஜமீந்தாரி நிலச்சுவான்தார்- முதலாளி வர்க்கங்களின் கையாளாக கடனாற்றி வந்துள்ளார்..பிற்போக்கு பணமூட்டைகளின் பாதை ஈரோட்டுப்பாதை..”

ஆதாரம் ஈரோட்டுப் பாதை சரியா - ப. ஜீவானந்தம்

aug19

நாட்டின் பிரதமர் திரு நரேந்திரமோடி அவர்கள் , நாடாளுமன்ற பதிலின் போதும்- செங்கோட்டை சுதந்திர தின கொடியேற்ற உரையின்போதும், தாமே திரும்ப வந்து ஆட்சி அமைத்து பிரதமராக போவதை வெளிப்படுத்தியுள்ளார். இது தன்னம்பிக்கையாக, அவரது ஆசையாக, இன்னும் அவரது ஆணவ எண்ணமாக, மக்களின் விருப்ப வெளிப்பாடாக பலவாறு விமர்சிக்கப்பட்டது/ புரிந்துகொள்ளப்பட்டது.

தன்னம்பிக்கையையும் ஆணவத்தையும் மெலிதான உளவியல் கோடுதான் பிரிக்கும். தன் வீட்டில் வேண்டுமானால் அவர் கொடியேற்றுவார் என்கிற எதிர் நம்பிக்கையையும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன் வெளிப்படுத்தாமல் இல்லை.

'நாட்டின் அரசியல்' , சில மாநிலங்களின் தேர்தலை நோக்கியும், அனைத்தையும் விஞ்சி 2024 பொதுத்தேர்தலையும் நோக்கி மய்யங்கொள்ளத்தொடங்கியுள்ளது. இண்டியா, என் டிஏ என இரு அரசியல் முனைகள், தங்களுக்குள் பல உள்முகங்களைக் கொண்டு நகர்வுகளை மேற்கொண்டுள்ளன.

இந்தியா என்கிற மய்ய நாடாளுமன்ற அரசியல் இதுவரை தனது 'ஸ்திரத்தன்மையை' பல மாநிலங்களில் இயங்கும் தேசிய கட்சிகளின் வலிமையைச் சார்ந்ததாகவே பெற்றுள்ளது . காங்கிரஸ் அல்லது பாஜக என்கிற பல மாநிலங்களில் இயங்கும் கட்சியின் வலிமைதான் stable Government என்பதை தந்துள்ளன.

'இந்திய அரசியல்' மாநிலங்களில் 'தேசிய அரசியல் கட்சிகளின்' வீச்சை குறைக்கும் வகையில் வட்டார அரசியல் மயமாக்கப்படும் பாதையில் தீவிரமாகிவருகிறது(regionalisation of politics). துணை தேசியம், வட்டார தேசியம், மொழிதேசியம் / இன தேசியம் என்றவகையில் ஆங்காங்கே மாநிலங்களில் அவ்வட்டார கட்சிகளும் அவை பிறப்பித்ததலைவர்கள், அல்லது அவர்களால் பிறப்பிக்கப்பட்ட கட்சிகளும் மக்களுடன் நெருக்கமாகி தேர்தல் அரசியலில் வீச்சை

உருவாக்கி வருகின்றனர். சில மாநிலங்களில் குடும்பம் சுற்றிய அரசியலாகவும் அவை பரிணமித்துள்ளன.

வட்டார அரசியல் கட்சிகள் தங்கள் பகுதிக்கான வளர்ச்சியில் மிக வலுவான தேசிய கட்சியின் அரசாங்கத்தை சார்ந்து இருப்பதை விரும்புவதில்லை. அதை தடையாகவும் பார்க்கின்றனர். தங்களின் ஆதரவுடன் மத்தியில் ஆட்சி என்பதையும் அவர்கள் விரும்புகின்றனர். மாநில கட்சிகள் வளர்ச்சி ஒப்பீடு என்கிற சோதனைக்கு உள்ளாக வேண்டியிருப்பதால், புதிய புதிய நலத்திட்டங்களை, கடன் சுமையை ஏற்றிக்கொண்டாவது நடத்த வேண்டிய போட்டியை தங்களுக்குள் அதிகப்படுத்தியும் வருகின்றனர்.

எந்தவொரு மாநில கட்சியும் தன்னால் தனது மாநிலத்தின் அத்துனை இடங்களை பெற்றாலும் அதனால், பிறர் உதவியின்றி ஆட்சி அமைக்கமுடியாது. வலுவான மத்திய தலைமை என்கிற ஆசை அதற்கு ஆளும்போது ஏற்பட்டாலும், அதை நினைவாக்க முடியாது. இப்படி பல வட்டார கட்சிகள் தங்களின் நியாயமான regional aspirations யை போட்டியின்றி முன்னெடுக்கவும் முடியாது. தங்களுக்குள் மிக நியாயமான, very balanced leader என்கிற ஏற்பை உருவாக்கும் அளவிற்கு, இந்தியாவில் வட்டார அரசியல் கூட்டுச் சோதனை (நிலைத்து நிற்க) இதுவரை வெற்றிபெறவில்லை.

அதிக இடங்களை தேசிய கட்சி ஒன்று பெற்று, அதற்கு வட்டார கட்சிகள் துணை நின்று - நிலையான ஆட்சியைத் தருவதற்கான சமநிலை பேணல் தான் 2024 ல் சாத்தியமானதாகத் தோன்றுகிறது.

பாஜக - திரு மோடி அவர்கள் ஆட்சியை போக்கவேண்டும் என்ற உறுதிப்பாடு உள்ளவர்கள் இன்று வலுவான மாநில கட்சிகளை நம்பி இருப்பது போல் உள்ளது. ஆனால் காங்கிரஸ் என்கிற மய்ய அச்சு தான், உண்மையில் stability என்பதற்கான உருவைக்கொடுக்கும். காங்கிரஸ் எந்த அளவில் பலம் பெற முடியுமோ, அந்த அளவில் தான், இந்தக் கூட்டணியின் ஆட்சி மாற்ற ஸ்திரத்தன்மை நின்று

நிலைபெறும். எனவே காங்கிரசை மேலும் பலவீனப்படுத்தும் எந்த மாநில மட்ட உத்தியும் , பாஜகவிற்கு சாதகமான பாதையைக் கூட அமைத்துவிடலாம் என்கிற எச்சரிக்கை மாநில கட்சிகளுக்கு தேவையெனத் தோன்றுகிறது.

குறைந்த பட்ச செயல்திட்டத்தை முன்வைத்து, காங்கிரசை அதீதமாக பலவீனப்படுத்தாமல், மாநில கட்சிகள் எடுக்கும் நிலைப்பாட்டில்தான் அவர்கள் மத்திய அரசில் விழையும் மாற்றம் சாத்தியமாகும். மாநில கட்சிகள் பலமான பகுதியில் தாங்கள் எவ்வளவு வெற்றி பெறவேண்டும் என நினைக்கிறார்களோ, அதைப்போலவே காங்கிரஸ் தோற்காமல் இருப்பதற்கான நியாயங்களையும் சேர்த்தே பார்க்கவேண்டும்.

பல மாநில கட்சிகள் , பாஜக போலவே, பல்வேறு காரணங்களுக்காக காங்கிரஸ் எதிர்ப்பில் பிறந்து வளர்ந்தவைதான். இந்த மூல வரலாறு புகைமூட்டமாக ஒவ்வொரு கட்சியிலும் இருக்கலாம். பாஜகவை விட, தங்கள் இருப்பு காங்கிரசால் இப்போதுள்ள சூழலில் மோசமாகாது என்கிற நம்பிக்கை இருந்தால்தான், காங்கிரஸ்பாற் சற்று அனுசரணையுடன் இக்கட்சிகளால் இயங்க முடியும்.

காங்கிரசும் தன்னால் இனி முடியாது எனச் சோர்ந்து, மாநில கட்சிகள் பாஜகவை அகற்ற உதவி செய்தால் போதும் என்கிற content உடன் ,வீச்சான செயலற்ற உபதேச மொழியாடலில் நின்றுவிடக்கூடாது.

தேசிய கட்சியொன்றின் வலுவற்ற positionல் பாஜகவிற்கு மாற்றைக் கொணரலாம் என்பது சரியான நிலைப்பாடாக தோன்றவில்லை

aug 19

Gandhi about Dadabhai Naoroji in 1910

Just look at his work. He has dedicated his life to the service of India. We have learned what we know from him. It was the respected Dadabhai who taught us that the English had sucked our life blood…

Is Dadabhai less to be honoured because, in the exuberance of youth, we are prepared to go a step further? Are we , on that account wiser than he? It is a mark of wisdom not to kick away the very step from which we have risen higher. The removal of a step from a staircase brings down the whole of it..

If after many years of study, a teacher were to teach me something, and if I were to build a little more on the foundation laid by the teacher , I would not , on that account, be considered wiser than the teacher. He would always command my respect. Such is the case with the Grand Old Man of India. We must admit that he is the author of nationalism

aug 20

மறைந்த மார்க்சிய மற்றும் தமிழறிஞர் கோவை ஞானியுடன் 1990களிலும், 2000 தொடக்க ஆண்டுகளிலும் தொடர்பு இருந்தது. இக்காலத்தில் 4 முறை அவரை நேரிடையாக சந்திக்க முடிந்தது. ஆனால் தொலைபேசி உரையாடல் பலமுறை நடந்துள்ளது. விவாதமும் நடந்துள்ளது.

மெயின்ஸ்ட் ரீம் கம்யூனிஸ்ட் கட்சிகள் CPI- CPMகுறித்து அவருக்கு விமர்சனமும் , வருத்தங்களும் இருந்தன. நீங்கள் நியுஏஜ் பீப்பிள்ஸ் டெமாக்ரசி படிக்காமல் பேசுவது சரியா என நான் கேட்டுள்ளேன். அதையெல்லாம் படித்துவிட்டு நிறுத்திட்டேன் என அவர் சொன்ன நினைவு. 2000 ஆண்டுகளில் அவர் பெற்ற பென்ஷனை 'நீங்கள் எல்லாம் நிறுத்தாமல் இருந்தால்போதும்' என கசந்து கூட அவர் பேசியது நினைவிற்கு வருகிறது.

நான் தொழிற்சங்கத்தில் முழு நேரமும் செலவு செய்துகொண்டிருப்பதை, என் தொலைபேசி உரையாடலில் அவர் விமர்சித்துள்ளார். ஏராளம் தெரிந்து கொள்வதற்கும், எழுதுவதற்கும் இருக்கிறது..அதற்கு ஆட்கள் மிகக் குறைவாக வருகின்றனர். தொழிற்சங்கத்தில் அதற்கு பஞ்சமில்லை என்பது அவர் கொடுத்த அன்றைக்கான அறிவுரை.

சிபிஎம்மில் இருந்து வெளியேற்றப்பட்டு தமிழ் தேச பொதுவுடைமை கட்சி ஆரம்பித்த தோழர் கி வெங்கடராமனும் (மணியரசன் தலைமையில்) பட்டாபிக்கு தலைவர் கிறக்கம் போக மாட்டேங்கிறது எனச் சொல்லியிருந்தார். அவர் அரசியலில் முழுநேர பங்களிப்பாராக இன்றும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

2006 ல் தோழர் ஞானிக்கு கோவையில் விழா ஒன்று எடுத்தனர். எனக்கும் அழைப்பு வந்தது. அவரது (தமிழ் நேயம் என நினைக்கிறேன்) இதழில் சில கட்டுரைகள் எழுத அவர் வாய்ப்பு

கொடுத்திருந்தார். ஜெயமோகனின் பின் தொடரும் குரலுக்கு அது வந்தவுடன், நான் எழுதிய கட்டுரையை அன்று காலச்சுவடு வெளியிட இயலாமையை தெரிவித்தபோது, ஞானி அதை வாங்கி வெளியிட்ட ஞாபகம் இருக்கிறது. தோழர் ஜெகன் தலைமையில் பாரதியார் இல்லத்தில் சென்னையில் அப்புத்தகம் வெளியிடப்பட்டது. ஜெயமோகன் வேண்டுகோளில் ஜெகனை அழைத்து வந்தேன். அஸ்வகோஷ், பிரேம், பட்டாபி ஆகியோர் அப்புத்தகம் குறித்து பேசினோம். விழாவில் எதிரில் சுந்தர ராமசாமி, ஞானி உள்ளிட்டோர் அமர்ந்திருந்தனர். தர்மபுரி தோழர்கள் எனது கட்டுரையை வாங்கி அங்கு படித்ததாகச் சொன்னார்கள்.

ஞானிக்கு கோவையில் நடந்த பாராட்டு விழாவில் அவர் குறித்து பலரும் எழுதிய கட்டுரைத் தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டது. தோழர் சிற்பி அக்கட்டுரைகளை அறிமுகம் செய்து பேசியதாக நினைவு. ஞானியின் எழுத்துலகம் என்கிற எனது கட்டுரையும் அதில் இடம் பெற்றது. ஊர் மாற்றம், குடியிருப்பு மாற்றங்களில் பல என்னிடமிருந்து நீங்கின போலும்.

தோழர் ஞானியின் மார்க்சியப் புரிதல் என நான் எழுதிய கட்டுரை, மார்க்சியத் தடங்கள் என்கிற புத்தகத்தில் இடம்பெற்றது. இப்புத்தகத்தை 2006 டிசம்பரில் , மறைந்த தோழர் தேவபேரின்பன் முன்னுரையுடன் என் சி பி எச் கொணர்ந்தனர்.

கோவை விழாவில் பங்கேற்றமைக்காக, தோழர் ஞானி நினைவுப் பரிசாக “ தன்னுரிமைத் தமிழ்த்தேச எழுச்சி முரசு” என்கிற புத்தகத்தை அளித்தார். அதில் நாள் 28- 1-2006 எனப் போடப்பட்டிருக்கிறது.

அப்புத்தகத்திலிருந்த வே ஆனைமுத்து, கு.ச ஆனந்தன், பூ.அர. குப்புசாமி எழுத்தை திரும்ப படித்த போது, அப்புத்தகம் தோழர் ஞானியின் நினைவைக் கிளறிவிட்டது.

2007 லிருந்த அடுத்த 10 ஆண்டுகள் மேலும் தீவிர தொழிற்சங்கப் பணியில் என்னை ஈடுபடுத்திக்கொள்ளும் சூழல்தான் வாய்த்தது.

இப்போது அதில் அடங்கி, ஞானி அப்போது சொன்ன சில வேலைகளில் கவனம் போய்க்கொண்டிருப்பதை உணர்கிறேன். ஆனால் தோழர் ஞானி, இதை அறிய இல்லை...காலம் எல்லோரையும் விழுங்கிவிடுகிறது..

aug 21

So said MK Gandhi

We can work together only if our interests are identical (otherwise difficult)

Men have before now done many things which were subsequently found to have been wrong.

No man can claim that he is absolutely in the right or that particular thing is wrong because he thinks so..

It is therefore he should not do that which he knows to be wrong and suffer the consequences whatever it may be. This is the key to the use of soul force

aug 21

போற்றுதலும் தூற்றுதலும் சமன் செய் உலகு

மனித சமூகம் தன் உடன் வருகிறவரை கொண்டாடி தீர்ப்பதும் புறக்கணித்து ஒதுக்குதலையும் தொடர்ந்து செய்து வருகிறது. போற்றுதல் மிகலாம். தூற்றுதலும் மிகலாம்.

காந்திக்கு அவர் இருந்த காலமானாலும் , மறைந்து வாழும் இக்காலமானாலும் அன்றாட போற்றுதலும் இணையான தூற்றுதலும் நடந்து தராசு சமநிலையாகிவிடுகிறது. போற்றுதல் தூற்றப்படுதல்

என்கிற balance அவர்பால் அமைந்து விடுகிறது. மார்க்சிற்கும் போற்றுதலும் தூற்றுதலும் கிடைக்கப்பெற்றன. சோவியத் காலச் சூழல் அளவிலான போற்றுதல் தற்போது இல்லாமல் இருப்பதை உணரமுடியும். தூற்றப்படும் விமர்சனங்கள் தொடர்வதையும் காண்கிறோம். Balance ஆனதா என உணரமுடியவில்லை.

நேருவிற்கு போற்றுதல் மிகுந்த விடுதலைக்காலம் இருந்தது. முடிசூடா மன்னராக பாவிக்கப்பட்டார். கண்ணெட்டும் தூரம் எதிரி இல்லை என உணரப்பட்டக் காலமுண்டு. மாற்றுப் பார்வை விமர்சன தூற்றல்கள் அப்போதே பலரால் செய்யப்பட்டன. அவையெல்லாம் சிறிது நேர தூரல்களாகி காய்ந்து போயின. வலது அரசியலின் வெற்றி நேரு நீக்கம் என்கிற தூற்றலை கொஞ்சம் செய்து பார்த்துள்ளது. போற்றுதல் தூற்றுதல் balance ல் நேரு நிறுத்தப்பட்டுவிட்டாரா என என்னால் இன்னும் சரியாக உணரமுடியவில்லை.

அம்பேத்கர், பெரியார் வாக்கு அரசியலின் பெரும் icons. இவர்களுக்கான போற்றுதல் மிகு காலமிது. இவர்கள் மீது தூற்றுதல் இல்லாமல் இல்லை. போற்றுதலை ஒப்பிடுகையில் தூற்றுதல் மிகையில்லை. இவர்களை இன்னும் balance ஆக்கும் சூழல் வரவில்லை. இனி இவர்களால் ஆகப்போவதில்லை எனக் கருதும்போது, தூற்றல் சற்று கூடலாம்.

தற்போது திரு மோடி. இவரை நேருவோடெல்லாம் ஒப்பிடலாமா என எவரும் கோபமடைய வேண்டாம். எவருக்கும் வரலாற்றில் மேல் எழும் விருப்பம் உந்தி தள்ளாமல் விடுவதில்லை. வரலாற்றில் இடம் எனத் தொடங்கி , தானே வரலாறு என்கிற பெரு வேட்கையால் அரசியல் நகர்த்தப்படுவதைக் காண்கிறோம். வாஜ்பாய் அத்வானியை விட தான் பாஜகவை உயர்த்திவிட்ட எண்ணம் மட்டுமில்லாமல், இதுவரை இருந்த எந்த பிரதமரையும் விட இந்தியாவை உயர்த்திவிட்டதாக கருதிக்கொள்ளும் எண்ணமும் இருக்கலாம்.

மோடி அவர்களுக்கும் பெரும் அவதாரம் என்கிற போற்றிப் பாடல்கள் பெரிதாக எழுந்தன. இந்திய இரட்சகன் என்கிற பிம்பம் உருவானது. இப்போது தூற்றுதல் விமர்சனங்கள் எழத்தொடங்கியுள்ளன. கடவுள்கள் சைத்தான்கள் ஆவதும், சாத்தான்கள் கடவுள் ஆக்கப்படுவதும் இந்த போற்றுதல்- தூற்றுதல் industry ல் சர்வ சாதாரணமாக நடைபெறும்.

தமிழகத்திலும் பெரியாரை விட சற்று கூடுதலாக சாதித்த எண்ணம் அண்ணாவிற்கு இருந்திருக்கலாம். அண்ணாவை விட காரியங்கள் பல செய்த எண்ணம் கலைஞருக்கு இருந்திருக்கலாம். தற்போதுள்ள திரு ஸ்டாலினுக்கு தன் தந்தை செய்ததை விஞ்சிய எண்ணம் உருவாகலாம். எம்ஜிஆரை விட என அம்மா ஜெயலலிதாவிற்கு இருந்திருக்கலாம். திராவிட இயக்கம் இப்படி தன்னை சமன் செய்துகொள்வதைக் காணலாம். உள் வழி சமன்கள் அடைந்த பின்னர், மனம் வெளிச் சமன்களுக்கும் போராடும்.

இந்த உலகம் எல்லா கணக்குகளையும் ஏதோவொரு வகையில் நேர் செய்ய விழைகிறது. வெறுப்பு எனில் அன்பைக் காட்டி, இருட்டு எனில் ஒளியைக் காட்டி, தான் உருவாக்கி வைத்துள்ள அனைத்து இருமைகள் வழியாகவும் உலகம் தன்னை சமன் செய்துகொள்கிறது.

சிறு கூட்டமாக இருந்தாலும் கூட அங்கும் ஒருவித சமன்நிலை செய்யப்படும். நேரில் சொல்வது ஒன்றாகவும், தனி உரையாடல்களில்

நேர் மாறான ஒன்றை சொல்லியும் தன் balance யை அது பார்த்துக்கொள்கிறது.

அப்போதைக்கான தேவைகளை விதந்தோதி வரலாற்றை உலகம் அவ்வப்போது தொடங்கிக்கொள்கிறது. நடந்தவை என்பதை அது கிழித்து கழித்துவிடுகிறது. குப்பைகளாக்கப்பட்ட past யை எவர் சுமப்பது என அது ஒதுக்குகிறது. பின்னர் தன்னை புதுப்பிப்பதாக நினைத்து ஒருவகை சமாளிப்புகளில் சமன் பேண விழைகிறது. சமன் செய்தலில் பெருங்காரியக் கண் விழிப்புடன் தொழிற்படுகிறது. அந்தக் காரிய கண்ணால் புது உலகை தனக்கான ஏணி உலகை அது சமைத்துக்கொள்கிறது. புதிய ஏணியிலும் தரையும் முதற்படிக்கட்டும் பழையதாகி விடுகிறது. அதற்கு பின்னர் புதிய சமன் தேவைப்படலாம். ஆகாயத்தை தொட ஏணிகள் உண்டா? அங்கு எப்படி சமன் செய்வது ? பதில் வேண்டிய கேள்விகள்.

போற்றுதல் தூற்றுதல் வழி மனித உலகம் தன்னை சமன் செய்துகொள்ளும் கலையை அழகாக வைத்துக்கொண்டிருக்கிறது. அங்கு மாய்ந்து போகவே ஏகபோகம் உருவாகிறது அல்லது உருவாக்கப்படுகிறது. Beware of it...

21-8-2024

aug 21

மார்க்சியம் இன்றும் உலகளாவிய விவாதப் பொருளாக இருப்பதற்கான, பெரும் கட்டுமானத்தை செய்ததில் லெனினுக்கு பிரதான பங்கிருக்கிறது.

ருஷ்ய அரசியலை பல்லாண்டுகள் மார்க்சிய புரிதலில் பார்த்த அவர், அச்சமூகம் புரட்சியின் மாற்றத்தின் தலைவாயிலில் இருப்பதாக உணர்ந்தார். சக தோழர்களை உணரவைத்தார். இதன் விளைவாக அக்டோபர் புரட்சி என்கிற சோதனையை அவர் துணிச்சலாக மேற்கொண்டார். அவரைத்தொடர்ந்த ஸ்டாலின், குருஷேவ் , பிரஷ்னேவ், ஆந்திரபோவ் , கோர்பசேவ் சோதனைகளுடன் லெனின் ஏற்படுத்திய அக்டோபர் கனவுகள் முடிந்தன.

லெனின் சோவியத் சோதனை மாடல் வீழ்ந்தாலும், 21 ஆம் நூற்றாண்டில் சோசலிசம் என்கிற உரையாடல் மார்க்ஸிய விளக்கங்களுடன் பெருகாமல் இல்லை. தொடர்ந்து மார்க்சிய விவாதங்கள் அதன் தேவைகளை சுட்டிக்காட்டியும், அது வழக்கொழிந்த ஒன்று என்ற விமர்சனங்களுடனுன் பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன. மார்கஸ் தொடர்ந்து கட்சிப் பொருளாகவும், விவாதப்பொருளாகவும் நீடிப்பதில் லெனினின் அக்டோபர் சோதனை, சோவியத் மாடல் உருவாக்கம் பெரும் பங்காற்றியுள்ளது.

காந்திக்கு இப்படிப்பட்ட அரசியல் நிறுவனம் சார்ந்த , உலகளாவிய தாக்கத்தை உருவாக்கிய ஏற்பாடுகள் மார்க்சிற்கு கிடைத்தது போல் கிடைக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. காந்தி தனது சுயப் போராட்டங்கள் வழியே மட்டுமே தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அரசின் வழியாக, கட்சி அரசியல் வழியாக அவர் நெடுக அழைத்துச் செல்லப்படுகிறார் என உணரப்படமுடியவில்லை. காந்தியானா மீது ஆர்வம் உள்ளவர்களின் விரிவான விவாத வெளிகளின் மூலமாகவும், காந்திய இயக்க நண்பர்களின்

ஆங்காங்கேயான செயல்பாடுகளின் மூலமாகவும் காந்தி கைமாற்றித் தரப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

மார்க்சிற்கும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஆய்வுவெளி பரப்புண்டு. ஆனாலும் அவர் கம்யூனிஸ்ட் கட்சிகளின் உதடுகளில் நேர்மறையாகவும், வலது கட்சிகளின் உதடுகளில் எதிர்மறையாகவும் வெளிப்பட்டுக்கொண்டிருப்பார். காந்திக்கும் இப்படி ஆதரவான பிரமித்துப் பேசும் உதடுகளும், அவரை பெருமளவு வசைபாடும் உதடுகளும் இருக்கவே செய்கின்றன. காங்கிரஸ் கட்சி என்ற வகையில் காந்தியானா விற்கு போதுமான , காங்கிரசில் தொடர்ந்து காந்தியர்களை வைத்திருந்து அழைத்துச் செல்ல அக்கட்சி பங்களிப்பை செய்யாமல் போனதாகவே எனக்குப்படும்.

அவர்களின் அதிகார வெளியீடுகளில் காந்தி வருவதோ, அவர்களின் இணையங்களில் காங்கிரசில் காந்தியுடன் பணியாற்றிபோன காந்தியர்களின் ஆக்கங்களுக்கோ முன்னுரிமையிருப்பதில்லை. பாஜக தனது library ல் , அல்லது வெவ்வேறு வழிகளில் தனது சித்தாந்த முன்னோடிகளுக்கு கொடுத்திருக்கும் space அளவுகூட காங்கிரஸ் தனது பெரும்பயணத்தில் செய்யவியலாமல் போனது வருத்தமான ஒன்றே. காங்கிரசில் படேல் பக்கம், கிருபளானி பக்கம், வினோபா பக்கம், குமரப்பா பக்கம் என சில பகுதியாவது, நேருவின் நூல்தொகை அளவிற்கு இல்லாமல் போனாலும் இணைத்து வைத்திருந்தால் அது இன்றும் பயனளித்திருக்கும். தொடர்ந்து காங்கிரசில் பயணித்தவர் பின்னர் வேறுபட்டு போயிருந்தாலும், அவர்கள் இருந்த காலம்வரை அவர்களின் பங்களிப்புகளை அது தனது archive களில் வைத்திருக்கும் அரசியல் கண்ணியத்தை கொண்டு பயணிக்கவேண்டிய அவசியம் உள்ளது.

தமிழகத்தில் பெரியாருக்கு இந்த 50 ஆண்டுகளில் பெரிய ஏற்றம் உருவானது. இதற்கு அண்ணாவின் பங்களிப்பு அளப்பரியது எனலாம். 1949ல் பிரிவிற்கான காரணங்களையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு, அவரால் அடையாளம் காட்டப்பட்டவர் என்ற வகையில் , குரு

காணிக்கையை அண்ணா அற்புதமாக செய்து அரசியலில் புதிய கண்ணியத்தை உருவாக்கினார். பெரியார் நாணவேண்டியிருந்தது. அடுத்து வந்த கலைஞராக இருந்தாலும், ADMK தொடங்கிய எம்ஜிஆர் ஆனாலும் பெரியார் என்கிற உருவை மேலும் உயர்த்தியே சென்றனர். இதன் பொருள் திக விற்கோ, தன்னளவில் பெரும் உழைப்பை நல்கிய பெரியாருக்கோ, பின் தொடர்ந்த மணியம்மை, வீரமணி , ஆனைமுத்து இன்னும் பல பெரியாரியத் தோழர்களுக்கோ பெரியாரை எடுத்துச் செல்வதில் பெரும் பங்கில்லை என்பதல்ல. அண்ணாவின் ஆட்சி சோதனை முக்கிய பங்களிப்பை செய்தது என்பதுதான். கட்சிகளைத்தாண்டி பெரியாரும் இன்று விவாத வெளியில் இல்லாமல் இல்லை.

அண்ணல் அம்பேத்கரும் தன் பெரும் உழைப்பால்தான் தன்னை நிலைநாட்டிக்கொண்டு வந்துள்ளார். இன்னும் வருவார். அவருக்கான அவரது கட்சி சோதனையோ, அவரது பெயரை முன் நிறுத்தி இன்றுவரை செய்யப்படும் கட்சி சோதனைகளோ ஓரளவிற்கு உதவியிருக்கலாம். அவரின் மேதாவிலாசத்தால்கட்சிகளை தாண்டி அவர் விவாதப்பொருளாகியிருக்கிறார்.

எவர் ஒருவர் தனது சிந்தனை செயல் முறைகளால் அடிப்படை கட்டுமானங்களை செய்கிறார்களோ அவர்கள் ஏதோவொரு வழியில் பெரும் சிந்தனை கட்டிடங்களாக எழுந்துகொண்டே செல்வர். அப்படிப்பட்ட வாய்ப்பை இந்தத் தலைவர்கள் உலகோர் மத்தியில் பெற்றுள்ளனர்

aug 22

தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல் புத்தகத்திற்கு நான்கு தோழர்களின் திறனாய்வுகள் இந்த ஆகஸ்ட் மாதத்தில் வெளிவந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது. தோழர்கள் ரகுபதி, பால்சாமி, கணேசன், பீட்டர் ஆகிய தோழர்கள் புத்தகத்தை பொருட்படுத்தி உள்வாங்கி தங்கள் பார்வைகளை வெளிப்படுத்தியுள்ளனர். தோழர் கணேசன் திறனாய்வு காந்தி கல்வி நிலையம் சார்பில் புதன் உரையாக அமைந்தது. மற்ற மூவரும் கொடுத்த எழுத்து வடிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நான்கு தோழர்களுக்கும்- காந்தி கல்வி நிலையம் திரு அண்ணாமலை, மோகன், சரவணன் உள்ளிட்டோருக்கும், அறம் சாவித்ரி கண்ணன் அவர்களுக்கும் எனது நன்றி.

திருச்சி தோழர் பால்சாமி அவர்களின் திறனாய்வு

அன்புள்ள பட்டாபி

வணக்கம். இப்போதுதான் தோழர்காந்தி படித்து நிறைவுசெய்தேன். தோழமைமிக்க வாழ்த்துக்கள் பாராட்டுகள். எனக்குதெரிந்து காந்தியத்தை தன்கட்சிக்காரர் ஆக்கி வழக்காடத்துணிந்த முதல்சிகப்புஅங்கி வக்கீல் நீங்கதான்.

காந்திக்கு பல எதிர் தரப்பு உண்டு. தலித் முஸ்லீம் இந்துத்வா கம்யூனிஸ்ட் இதில் எந்த தரப்பினராவது காந்தி உயிரோடிருந்தபோது காம்ரேட்காந்தி என அழைத்திருக்கிறார்களா எனக்குதெரிந்து நீங்கள்தான். காந்தி நூறாண்டுகள்

காத்திருந்தார். மகிழ்ச்சி அடைந்து இருப்பார்.

இதுவரை நான் படித்த கம்யூனிஸ்ட்கள் காந்தி நல்லவர் பட் காந்தியம் நவீனமனிதனுக்கு உகந்தது அல்ல என்றே எழுதியிருக்கிறார்கள். நீங்கள்தான் உலக.. இந்தியமேதைகளின்

மேற்கோள்வழியாக காந்தியம் இன்றும் செல்லுபடியாகும் தத்துவம் என்று

அவர்களுக்கு பிடித்த விஞ்ஞான அனுகுமுறையில் விளக்கியிருக்கிறீர்கள். கம்யூனிஸ்ட்கள் அன்று தவறவிட்ட பஸ்ஸை இன்றையதலைமுறை தவறவிடக்கூடாது என்ற உங்கள் அக்கறையின் ஆக்கபூர்வமான வெளிப்பாடே இந்நூல்.

தனிமையான இனிமையான ஒற்றை வயலின்இசை காந்தியம். டமாரக்காதுகளுக்கு உங்கள் மென்மையான மேன்மையான காந்திய இசை போய்ச்சேர விரும்புகிறேன்.

இனி என் தனிப்பட்ட கருத்துக்கள்.

முன்னுரையில் அறம்சார்ந்த அரசியலுக்கு காந்தியைவிட உகந்தவரை மார்க்ஸீயர்கள் உணர முடியாது என்கிறீர்கள். அறம்சார்ந்த அரசியலுக்கு மார்க்ஸீயம் உகந்ததா இல்லை என்றே உணர்கிறேன். சர்வாதிகாரம் என்ற பிரகடணத்தில் அறத்திற்கு இடமுண்டா

Turn the search light inward புரட்சிகளின் மதிப்பைவிட மதிப்புகளின் புரட்சி உயர்ந்தது என்றால் காந்தியும் மார்க்ஸும் இயற்கை கூட்டாளிகளாக இருக்கமுடியுமா.. உங்கள் கட்டுரைகளில் உள்ள மேல்நாட்டு இந்திய அறிஞர்களுக்கு இல்லாத ஒரு தகுதி

உங்களுக்கு உண்டு. காந்திக்குப்பின் நடந்த நூறாண்டு உலக வரலாறு உங்களுக்கு தெரியும். கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத்தில் நாற்பது ஆண்டுகள் பொறுப்பேற்று செயல்பட்ட கம்யூனிஸ்ட் நீங்கள் என்பது கூடுதல் தகுதி.

படிப்பறிவு பட்டறிவின் துணைகொண்டு மார்க்ஸீயத்தின் போதாமைகளை கூர்மையாக தீட்டியிருக்கலாம். ஆனால் உங்கள் நூலைப்படிக்கப்போகும் கம்யூனிஸ்ட் சகாக்களை அதிகமாக கவனத்தில்கொண்டு அதிகமான எச்சரிக்கை உணர்வுடன்

வார்த்தைகளை சுத்திகரித்திருக்கிறீர்கள். சத்தியத்தின் கவுச்சிவாசனை விரும்பும் என் போன்ற வாசகர்களுக்கு ஏக்கம்தான். உங்கள் ஓய்வுகாலவாழ்க்கை பயனுள்ள வழியில் பயணிப்பது கண்டு மகிழ்ச்சி. ஒரு தொழிற்சங்கதலைவர் குறுகியகாலத்தில் இத்தனை நூல்கள். நிச்சயம் சாதனைதான். இனி எழுத்தில் என்றும் வாழ்பவராக இருப்பீர்கள். தோழனாக பெருமிதம் கொள்கிறேன். காந்தியை கண்ணீரின்றி நான் படித்ததில்லை. என் கம்யூனிஸ்ட் தோழன் எழுதிய காம்ரேட்காந்தி நூலில் உங்களை அந்த புனிதமான கண்ணீருடன் பல முறை சந்தித்துக் கொண்டேன். அதற்காக நன்றி.

என்றும் அன்புடன்

எஸ். பால்

சென்னை தோழர் பீட்டர் திறனாய்வு (அறம் இணைய இதழில் வெளியானது)

தோழர் காந்தி : ஆர்.பட்டாபிராமன்

===========================

காந்தியின் கட்டுரைகளும், பேச்சுகளும் தொண்ணூறு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. காந்தி அரசியல், சமூகம், பன்னாட்டு விவகாரம் என பலவற்றையும் தொடர்ந்து பேசி, எழுதி வந்திருக்கிறார். 'பொது இடத்தில் பலர் மத்தியில் 24 மணிநேரமும் இருப்பவராக இருந்தார்'. காந்தி உலகம் முழுவதும் தொடர்ந்து வாசிக்கப்பட்டு வருகிறார். இங்குள்ள ஒவ்வொரு தத்துவங்களோடும் காந்தி ஒப்பிடப்பட்டு வருகிறார். அப்படிப்பட்ட ஒரு புத்தகம்தான் ஆர்.பட்டாபிராமன் எழுதியுள்ள 'தோழர் காந்தி - மகாத்மாவின் சோசலிச உரையாடல்'.

ஆர்.பட்டாபிராமன் ஒரு தொழிற்சங்கவாதி; சோசலிச கண்ணோட்டம் கொண்டவர். ஆனாலும் காந்தியைப் பார்த்து அவர் வியக்கிறார். காந்தியை 'எழுதிப் பார்த்ததில் எனது குணப்போதாமைகளின் நீள் சுவர்களை காணமுடிந்தது. எனது அதைரியத்தை கண்டறிய

முடிந்தது. பேச்சுக்கும், செயலுக்கும் இடையே எப்போதும் நீளும் இடைவெளியை குறைக்க முடியாமையை உணரமுடிந்தது' என்கிறார். மார்க்சியர்கள், காந்தியோடு ஒத்துப்போக ஏராளமான காரணிகள் உள்ளன என்பதை தத்துவநோக்கில் சொல்லும் ஒரு நூல்தான் தோழர் காந்தி.

இந்த நூலில் 199 பக்கங்களே உள்ளன. ஆனாலும் பல நூறு பக்கங்களின் பிழிவாக இது உள்ளது. பல அறிஞர்களின் வாதங்களைச் சுட்டி எழுதப்பட்டுள்ளது. மார்க்சியர்களும், காந்தியவாதிகளும் இணைந்து பணிபுரிய வேண்டிய இணைப்புப் புள்ளிகளை இது அடிக்கோடிட்டு காட்டுகிறது. இந்த நூலைப் படிக்கும் காந்தியர்கள், மார்க்சியர்களை ஆதரவோடு பார்ப்பார்கள். மார்க்சியர்கள் பெரியாரைப் போல, அம்பேத்கரைப் போல காந்தியையும் இயல்பாக தமது வழிகாட்டியாக கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

இந்த நூலில் பத்து அத்தியாயங்கள் உள்ளன. 'காந்தியின் நடைமுறை' என்ற முதல் அத்தியாயம், காந்தி ஒரு 'அகிம்சை சார்ந்த கம்யூனிஸ்ட் என்றே புரிந்து கொள்ள வேண்டும்' என்று பேராசிரியர் பேணுதார் பிரதான் கருதுகோளோடு முடிவடைகிறது. இந்த நூலின் பெரிய கட்டுரை இதுதான். காந்தி ஒரு தோழராகவே வாழ்ந்தார் என்பதை ஆசிரியர் சொல்ல வருகிறார். 'காந்தி தன் வாழ்நாட்களிலேயே சனாதனவாதி, பழமைவாதி,எதிர்ப்புரட்சி சக்தி, முதலாளித்துவ ஊதுகுழல் என ஏளனங்களுக்கு உள்ளானவர். ஆனால் அவர் சோசலிசம் என்பதை தான் உணர்ந்த வகையில் அந்த இலட்சியத்திற்கு நடைமுறை வாழ்வில் உண்மையாக இருந்தார்" என்கிறார் நூலாசிரியர்.

வைஸ்ராய் - க்கு எழுதிய கடிதத்தில் உங்களின் மாத ஊதியம் ரூ.21,000, அதாவது தினம் ரூ.700 வீதம் பெறுகிறீர்கள். ஆனால் இங்கிலாந்தின் பிரதமர் தினம் ரூ.180 வீதம் மாதம் ரூ.54000 பெறுகிறார் என எழுதுகிறார். தென்னாப்பிரிக்காவில் அவர் நடத்திய போனிக்ஸ் பண்ணையில் அனைவருக்கும் சமமான 3 பவுண்டு ஊதியம்தான்

வழங்கப்பட்டது. 'இல்லாதவர்களின் இருப்பிடத்தில் அவர் இருந்தார்.அவர்களைப் போல உடையணிந்தார். அவர்களின் மொழியில் உரையாடினார். அவர் உண்மையாக இருந்தார். மக்கள் அளித்த மகாத்மா என்பது அவரின் உண்மைப் பெயராயிற்று'. '

நேரு,நேதாஜி ஆகியவர்களை விலக்கிப் பார்த்தால் இடதுசாரிகளுடன் தோழமையுடன் விவாதிக்கக் கூடியவராக காந்தி மட்டுமே இருந்தார்' என்கிறார் நூலாசிரியர். மீரத் சதி வழக்கு, லாகூர் சதி வழக்கு போன்றவைகளில் குண்டு வீசுவது தவறு என்கிற பார்வையை விட்டுவிடாமல் அத் தோழர்கள்பாற் கரிசனத்தைக் காட்டியவராகவே காந்தி இருந்தார். 'இதை நாம் புரிந்துகொள்ளாமல் 'miss'செய்துவிடக் கூடாது' என்கிறார் பட்டாபிராமன்.

காந்தியவாதிகளும், சோசலிசவாதிகளும் அரசை எப்படிப் பார்கிறார்கள் ! காந்தி - லெனின், காந்தி - மாவோ, காந்தியும் அரசும் போன்ற அத்தியாயங்கள் காந்தியர்களும், மார்க்சியர்களும் உடன்படும்/முரண்படும் பகுதிகளைச் சொல்லுகிறது. காந்தியைப் பற்றி ஓரளவு புரிந்து கொண்டவர்களை, சோசலிசம் என்ற கருதுகோள்பால் அக்கறை உள்ளவர்களை இந்த நூல் யோசிக்க வைக்கும். இருசாராரும் உரையாடும் ஆதார நூலாக இதனைக் கொள்ளலாம்.

காந்தி கூறும் ஆலோசனைகள், கம்யூனிஸ்டு கட்சியின் உயர்மட்டக் குழு தன் அணிகளுக்கு விடுக்கும் அறைகூவல் போல உள்ளது " கிராமத்திற்குச் சென்று பணிபுரியுங்கள் என நான் சொல்லுவதை நீங்கள் இன்று கேட்கத் தயார் இல்லாமல் போனால் ஒரு நாள் உங்கள் பிரசங்கங்களை கேட்க யாருமே இல்லாத சமயம் வந்துவிடும்".

காந்தி சோசலிசவாதிகளோடு முரண்படும் இடங்ளை, காந்தியின் பொருத்தமான வார்த்தைகள் மூலம் சொல்லுகிறார் ஆசிரியர். "மார்க்சின் முறையைத் தவிர வேறு இல்லை- அது மட்டுமே சிறந்த முறை என்பதை நான் ஏற்கவில்லை" என்று காந்தி சொன்னதாக, அவரது உதவியாளராக இருந்த பியாரிலால் பதிவிட்டுள்ளார்.

"மார்க்சிற்கு இருந்த கல்வித் திறமை எனக்கு இல்லை. அது இருந்திருக்குமானால் மார்க்ஸ் தத்துவத்தை மார்க்ஸைவிட இன்னும் நன்றாக எழுதியிருப்பேன்" என்று காந்தி, தனது 74 ம் வயதில் மார்க்ஸ் எழுதிய மூலதனத்தை படித்துவிட்டு சொன்னதாக அறிகிறோம். 'பலாத்காரம் இல்லாமல் கம்யூனிசம் வந்தால் தானாக வரட்டுமே' என்று சொன்னதையும் பார்க்கிறோம். இரண்டாவது உலகப் போரில் ' ருஷ்யா தோற்றுவிட்டால்' உலகில் ஏழைகள் வேறு எவரை நோக்க முடியும்' என்று கவலைப்பட்ட காந்தியையும் நாம் பார்க்கிறோம்.

காந்தி தான் கடைபிடிக்காத எதையும் சொன்னதில்லை. போனிக்ஸ், டால்ஸ்டாய் பண்ணை, சபர்மதி, சேவாகிராம் போன்ற காந்தியடிகளின் ஆசிரம வாழ்க்கை முறை ஒருவகைப்பட்ட சோசலிச சிறு சமூக குடியேற்றமாகப் பார்க்கப்படுகிறது. வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை, வாழ்வூதியம் , கூட்டம் கூடும் உரிமை, பேச்சுரிமை,மத வழிபாட்டுரிமை, சிறுபான்மையினர்களுக்கான உரிமைகள் போன்றவை குறித்த 'கராச்சி தீர்மானம்', 1931ல் நேருவும், காந்தியும் இணைந்து உருவாக்கியவை.

காந்தியின் உப்பு யாத்திரையானது 241 மைல்கள் நடந்த நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் 1934 ல் மாவோ தனது long march ஐ நடத்தினார். இப்படி போராட்டங்கள் நடத்துவதை,ஏகாதிபத்தியத்தை மதிப்பிடுவதில், அடிப்படை உரிமைகள் குறித்த அநேக விஷயங்களில் இருதரப்பாரும் உடன்படுவதை காண முடியும்.' மார்க்சிய வகைப்பட்டு காந்தி வர்க்கப் போராளியல்ல; ஆனால் பாட்டாளிவர்க்க தத்துவத்திற்கு மிக அருகாமையில் நின்று போராடியவர்' என்று ராஞ்சி கூறியுள்ளார். அதனால்தான் பொதுவுடைமைவாதியான எஸ்.ஏ.டாங்கே தனது மிக இளம் வயதில் அதாவது 21 வது வயதிலேயே காந்தி Vs லெனின் என்ற நூலை எழுதினார் என்கிறார் பட்டாபிராமன்.

அரசின் பாத்திரம், வன்முறையின் எல்லை, மரண தண்டனை போன்ற விஷயங்களில் காந்தி தன் கருத்தை மறைத்ததே இல்லை."

எவ்வழியில் சோசலிசம் என்பது விவாதத்துக்குரிய ஒன்றாக இருக்கலாம். உழைப்பை மட்டுமே நம்பி இருப்பவர்களுக்கு பக்கபலமாக மார்க்சியம் நிற்கும் என்பது தொடர்ந்து சோதிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சோசலிச கட்டுமானம் இந்தியாவில் நடைபெற வேண்டுமெனில் அதற்கு காந்தி மிக நெருக்கமாகவே தேவைப்படுகிறார். பொருளாசை, சொத்து பேராசை, குறுகிய மனோபாவம், மிருகத்தனம், சுயநலம் என அனைத்தையும் அகற்ற காந்தியம் மிக முக்கிய வழியாகவே தெரிகிறது. மார்க்சியர்கள் தங்களுக்கு மிக நெருக்கமாக கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகவே காந்தியின் உரையாடல்கள் தொடர்கின்றன" என்று இந்த நூல் முடிகிறது. இதுதான் இந்த நூல் சொல்லும் சேதி.

பக்கங்கள் 199/ விலை ரூ.155/ உவேசா பிரிண்ட்ஸ்/ 9578078500.

பொள்ளாச்சி தோழர் ரகுபதி திறனாய்வு (முன்பே ரகுபதியின் முகநூல் பக்கத்தில் வெளியான ஒன்று)

தோழர் காந்தி- மகாத்மாவின் சோசலிச உரையாடல்

ஆசிரியர் : ஆர். பட்டாபிராமன்

பட்டாபியிடமிருந்து புதிய நூல். காந்தியைக் கண்டுணர்தலின் தொடர்ச்சி எனக் கொள்ளலாம். நூலின் பெயர் கவனம் பெறுகிறது.

இந்திய சமூக, அரசியல் வரலாற்றில் அதிகம் கொண்டாடப்படும், விமர்சிக்கவும் படும் தலைவர் மகாத்மாதான். தேசப்பிதா என்பதால் சிறு வயதிலே நமக்கு கற்பிக்கப்படுகிறார். அவரைக் கற்பிப்பவர்கள், கொண்டாடுபவர்களைப் பொறுத்து காந்தியைப் புரிந்தும், புரியாமலும், மறுத்தும் வளர்ந்தது எங்கள் தலைமுறை. காந்தியை சுட்டுக் கொன்றவர்களைப் பொறுத்து, இன்றைய காந்திய பார்வை கூர்மையடைவதுதானே நியாயம்.

இந்திய இடதுசாரிகள் காந்தியை முழுமையாக துணைக்கு வைத்திருந்திருக்கலாமோ என்ற எண்ணம் காந்தியை உள்வாங்கத்

துவங்கிய பின்னர் நூலாசிரியருக்கு தலைப்படடிருக்கிறது. அதன் உந்துதலாக காந்தியின் சோசலிச உரையாடல் குறித்த கருத்துகளை எழுதியுள்ளார். காலம் இந்த முயற்சிக்கு அழுத்தம் தருகிறது. முயற்சியின் போது காந்தியின் சோசலிச உரையாடல் தெறிப்புகளுடன் அவை தன்னிடம் ஏற்படுத்திய எதிர்வினைகளையும் சேர்த்துத் தந்துள்ளார்.

உரையாடல் தெறிப்புகளில் சில ....

- தன்னை வன்முறையை போதிக்காத கம்யூனிஸ்ட் என அழைத்துக் கொள்ள முடியும் என்றார் காந்தி.

- 'முதலாளிகளின் மனமாற்றம்' என்கிற நம்பிக்கை, வரலாற்றில் நடக்காத ஒன்று என்பதால் நடக்கவே முடியாத ஒன்று என அவர் ஏற்கவில்லை.

- காந்தி வர்க்கப் போராளி அல்ல, ஆனால் பாட்டாளி வர்க்க தத்துவத்திற்கு மிக அருகாமையில் நின்று போராடியவர்.

- நிரந்தரமற்ற வேலையெனில் அதிக கூலி கொடுங்கள்- காந்தி

- சோசலிசம் விரும்புவோர் மாற்றத்தை தன்னிடமிருந்து தொடங்க வேண்டும்.

- தனி மனிதருக்கு ஆன்மா இருக்கும்- அரசுக்கு அப்படி ஒன்று இல்லை

- சமூக மாற்றத்தில் நம்பிக்கை வைத்து செயலாற்றும் ஒவ்வொருவருக்கும் காந்தி தந்த செய்தி Turn the searchlight inward.

- மானுட பொருளாயத தேவைகள் ஓரளவிற்கு நிவர்த்தி செய்யப்பட்ட நிலையில் காந்தியின அவசியம் உலகினரால் உணரப்பட்டு வருகிறது.

- எந்திர மோகத்தைதான் எதிர்க்கிறேன். எந்திரங்கள் எஜமானன் ஆவதை எதிர்க்கிறேன்- காந்தி

'காங்கிரசில் சோசலிச கருத்துகள் வளர்வதற்கு குறுக்கே நிற்கப் போவதில்லை.'

- காந்தி அகிம்சைவாதி - நடுநிலை வாதி அல்ல

- மக்களுக்கு அச்சம் என்பதை அறியாமல் செய்தவர்.

- காந்தி - means and ends should be equally pure.

சோசலிசம் என்பது உன்னதமான நெறி மிகுந்த சமுதாயம் என்றால் அதை அடைவதற்கான வழிமுறைகளும் நெறி மிகுந்தவையாக இருக்க வேண்டும்.

- உங்களது வன்முறை பாதையை என்னால் ஏற்க இயலாது.

- உண்மையைத் தவிர ராஜதந்திரம் என ஏதுமில்லை. அகிம்சையை தவிர வேறு கருவி என்னிடம் இல்லை.

- எவ்வழியில் சோசலிசம் என்பது விவாதத்திற்குரிய ஒன்றாக இருக்கலாம். உழைப்பை மட்டுமே நம்பி இருப்பவர்களுக்கு பக்கபலமாக மார்க்சியம் நிற்கும் என்பது தொடர்ந்து சோதிக்கப்பட ஒன்றாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சோசலிச கட்டுமானம் இந்தியாவில் நடைபெற வேண்டுமெனில் அதற்கு காந்தி மிக நெருக்கமாகவே தேவைப்படுகிறார்.

படித்து முடிக்கும் போது, இன்றைய சூழலில் இருந்து எதிர்வினைகள் எழுந்து நிற்கின்றன....

.. காந்தியிலிருந்து கடவுளை எடுத்து விட்டால்?

.. லட்சியத்திற்கு உரிய நடைமுறை வாழ்வில் உண்மையாக இருந்தார். (அதனால்தான் மகாத்மா, ஆனால் அது மட்டும் போதுமா?)

.. காந்தி காலத்தை விட இன்று பிரச்சனைகள் வளர்ந்திருக்கின்றன - விரிந்திருக்கின்றன - அபத்தமாகியிருக்கின்றன.

.. அவர் இருந்திருந்தால் இன்றைய மதவெறியில் என்ன செய்திருப்பார்- ஏற்கெனவே ஒரு முறை உயிரை விட்டாரே?

.. மார்க்சிய வழியில் புரட்சிக்கு முயன்றவர்களே தடுமாறிய போது...?

.. கம்யூனிசம் பற்றிய பேச்சு Vs கம்யூனிச வாழ்வு

- நாம் - எதை தேடுகிறோம்? சோசலிச பாணிகளின் தோல்வி - விஞ்ஞான வளர்ச்சி - மனிதனின் தோல்வி - மதவாதிகளின் வெற்றி - இந்தியாவில்?

- இந்திய விடுதலை காந்தியத்தால் மட்டுமே வந்ததா?

சர்வதேச நெருக்கடிகள் எவ்வாறு உருவாகின? உள்நாட்டு போராட்டங்கள்?

- காலம்தானே காந்தியை, கருத்துகளை உருவாக்கியிருக்கும்? நிலைமைகள் மாறும் போது கருத்தை மாற்றியிருப்பார்

- சோற்றுக்கு அலையும் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தம்மை மாற்றிக் கொள்வது எப்படி?

- காந்தியின் நிர்வாக அனுபவம்?

- காந்தியிடம் விருப்பம், விமர்சனம் இருந்தது.

- காந்தியால் கடவுளை கேள்வி கேட்க, விமர்சிக்க, நிராகரிக்க முடியுமா?

- காந்திய மாதிரி இந்தியாவிலேயே வர முடிந்ததா?

- காந்தி கடவுளிடம் தோற்றார்?

அவர் காந்தியாக இருந்ததால்...

நூலின் மய்ய சரடு- கடைசி பத்தியில் ....

எவ் வழியில் சோசலிசம் என்பது விவாதத்திற்குரிய ஒன்றாக இருக்கலாம். உழைப்பை மட்டுமே நம்பி இருப்பவர்களுக்கு பக்க பலமாக மார்க்சியம் நிற்கும் என்பது சோதிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. அதே நேரத்தில் சோசலிச கட்டுமானம் இந்தியாவில் நடைபெற வேண்டுமெனில் அதற்கு காந்தி மிக நெருக்கமாகவே தேவைப்படுகிறார்..

நல்ல மனிதர் - நன்னெறிகள், போராட்டம்...எல்லாம் சேர்ந்த மகாத்மா - தோழர் என அழைத்துக் கொள்வோம் - மண்ணுக்கேற்ற மார்க்சியப் பெருமையுடன்...

புத்தகம் கீழ்கண்ட முகவரியில் கிடைக்கப்பெறும்.

லெனின் குருசாமி

சன் கிரியேஷன்ஸ், 57/1 காலேஜ் ஜங்ஷன் ரோடு

அழகப்பாபுரம், காரைக்குடி 630003

Ph 9578078500

Rs 155

- மெர்சோ

04.08.2021

aug 23

 லோகியா நேரு குறித்து ஒரு சுவையான நிகழ்வு

லோகியா தன் வெளிநாட்டு படிப்பு முடித்து இந்தியா திரும்பி காங்கிரசில் குறிப்பிடத்தகுந்த இடத்தை பெற வழியான ஒன்று அவரின் வெளிநாட்டு உறவுகள் குறித்த மேன்மையான கருத்துக்கள் எனலாம். அவரின் இந்த நிபுணத்துவத்தை அறிந்து காங்கிரசின் வெளிநாட்டு இலாகா பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. லோகியாவும் நேரு அருகாமையிலேயே அலகாபாதிலிருந்து பணியாற்றி வந்தார்.

ஆரம்ப லோகியா ஜெர்மனியில் நேரிடையான மூலமொழியில் மார்க்சை அறிந்திருந்தாலும், இந்திய விடுதலைக்கு காந்தியும் நேருவும் என்கிற இரட்டைத் தலைமை அவசியம் என நினைக்கலானார். குவிட் இந்தியா போராட்டக் காலத்தில் சோசலிஸ்ட்களின் சாகசம் பரவலாக பேசப்பட்ட ஒன்றானது. காங்கிரஸ் தலைமை முற்றிலும் சிறையில்..ராஜாஜிக்கு ஏற்பில்லை. அம்பேத்கர் வைஸ்ராய் அவையில்..குவிட் இந்தியா குறித்து விமர்சித்துக்கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட்கள் பங்கேற்பில்லை. இந்தச் சூழலில் முழுமையான களத்தையும் சோசலிஸ்ட்கள் எடுத்துக்கொண்டனர்.

இந்தக் காலத்தில் நேரு குறித்த மதிப்பீட்டில் லோகியாவிடம் சற்று சரிவு ஏற்பட்டது. காந்தி அவரை முழுமையாக பற்றிக்கொண்டார். காந்தியின் படுகொலை காலத்தில் சோசலிஸ்ட்கள் தாங்கள் அனாதையான உணர்வு கொண்டனர். நேரு கரம் பிடித்து என்கிற நம்பிக்கையில் ஜேபி, நரேந்திரா இருந்தாலும், லோகியா மீட்சிக்கு நாம்தான் தனி வழி தேடவேண்டும் என்ற நிலை எடுக்கலானார்.

காங்கிரசிலிருந்து முற்றிலுமாக வெளியே வந்து (காங்கிரஸ் சோசலிஸ்ட்) தங்களுக்கான சோசலிஸ்ட் கட்சியை அவர்கள் 1948ல் அமைத்துக்கொண்டனர். காங் வெளியுறவு கொள்கையில் அமெரிக்க

சாய்வா என்கிற கேள்வியை லோகியா எழுப்பலானார். அம்பேத்கர் போன்றவர் அமெரிக்க உறவு வேண்டும் என பேசி வந்தனர்.

இமயம் இயற்கையான பாதுகாப்பு என்பதை taken for granted ஆக எடுத்துக்கொள்ள முடியாது. புதிய புரட்சிகர மாவோ சீனா இந்த சந்தேகத்தை லோகியாவிற்கு தந்தது. அப்போதிருந்த காஷ்மீர், நேபாள், பூடான், சிக்கிம் வாழ் கோடிக்கணக்கான மக்களின் ஜனநாயக விருப்பங்களுக்கு இந்தியா தரவேண்டிய ஆதரவின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தி வந்தார். இந்திய சீனா என்கிற இரு பகுதிகளின் அண்டை நாடுகள் அனுசரிப்பு இந்திய பாதுகாப்பிற்கு அவசியம் என லோகியா உணரலானார். ஹிமாலயன் பாலிசி என்கிற நூலை அவர் எழுதினார்.

நேபாளில் மக்களுக்கு அதிகாரம் என்கிற முழக்கத்துடன் கொய்ராலா தலைமையில் நேபாள் காங்கிரஸ் இயக்கம் நடத்தியது. ஆதரவாக இருப்போம் என லோகியா இங்கு பேசலானார். நேபாள் நாள் என மே 25, 1949 யை பெரும் ஆர்ப்பாட்டத்துடன் அவர் நடத்தினார். மத்திய அரசு தடியடி கண்ணீர் புகையுடன் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைத்தது. லோகியா உட்பட 46 பேர்கள் மீது வழக்கு போட்டு சிறை பிடித்தது.

லோகியா சிறையில் பார்க்க வந்த தோழர்களிடம் என்னப்பா இவர்கள் இவ்வளவு அவசரப்படுகிறார்கள். சோவியத்தில் ஸ்டாலின் கூட ஒடுக்குவதற்கு கொஞ்ச ஆண்டுகள் எடுத்துக்கொண்டார் என வருத்தப்பட்டாராம்.

சிறையில் நேருவின் செயலர் மதாய் கூடை மாம்பழங்களுடன் லோகியாவை பார்க்க வந்தார். நேரு இந்திரா மதாய் கொடுக்கும் மாம்பழங்கள் என்றார். லோகியாவிற்கு நேரு அனுப்பிய மாம்பழங்கள் என செய்திகள் வெளியாயின. நான் மாம்பழம் அனுப்பவில்லை என நேரு விளக்கம் தந்தார். அதேநேரத்தில் லோகியாவிற்கு message அனுப்பினார். உன்னை ஒருநாள் கூட சிறை

வைக்க என் மனம் ஒப்பாது. ஆனால் நான் கையறு நிலையில் உள்ளேன். நீ அறிவாய் படேல் உள்துறை மந்திரி.

தண்டனைக்காலம் முடிவதற்கு முன்னரே அவர் விடுதலையானார். நேபாள் காங்கிரஸ் வாக்குரிமை- பஞ்சாயத்து அதிகாரம் என்கிற வழியில் பயணிக்க லோகியா அறிவுறுத்தினார். ஆனால் இந்திய தலையீட்டில் மன்னருடன் நேபாளில்சமரசம் செய்துகொண்டனர்.

சோசலிஸ்ட்களுக்கு தெளிவு வேண்டும் எனப் பேசினார் லோகியா.

The country's hunger for freedom has been satisfied but the craving for equality and prosperity still remains. Awaken the people and direct them towards the satisfaction of this craving of equality

ஜேபி நேருவுடன் தோழமை பாராட்டவிழைந்தாலும், லோகியா போன்றவர் விமர்சனத்தை கூர்மைபடுத்தலாயினர். Non Congress கூட்டணி என்கிற ஏற்பாட்டிற்கான பாதையை தீவிரப்படுத்தியவர்களில் ஒருவராக லோகியாவின் வரலாறு போனது...

23-8-2024

aug 24

Gandhi to Nehru oct 5 1945

I earnestly desire that in the political field also we should understand each other clearly. Secondly neither of us thinks

himself useless. We both live for the cause of India's freedom and we would both gladly die for it. We are not in need of the world's praise.

Whether we get praise or blame is immaterial to us. There is no room for praise in service. I want to live to 125 for the service of India but I must admit that I am now an old man. You are much younger in comparison and I have therefore named you as my heir. I must, however, understand my heir and my heir should understand me. Then alone shall I be content.

aug 25

காந்தி படுகொலைக்குப்பின்னர், சோசலிஸ்ட்கள் அரசியல் சோதனைகள் பெருமளவு அரசியல் அதிகார அரங்கில் பலனைத் தரவில்லை.

கிருபளானி கிசான் மஸ்தூர் சோதனை, லோகியா ஜேபி நரேந்திரா சோசலிஸ்ட் கட்சி சோதனையைத் தொடர்ந்து அவர்கள் கூட்டாக பிரஜா சோசலிஸ்ட் சோதனையை செய்தனர். எல்லாம் தனித்தனி பெருந்தலைகள். ஒரே அமைப்பு என்றாலும் சுதந்திர சிந்தனையில் திளைத்தவர்கள்.

பட்டம் தாணுப்பிள்ளை கேரள அரசு துப்பாக்கிச் சூடு பிரச்சனையானது. சிறையில் இருந்த லோகியா பதவி விலகு என தன் கட்சிக்காரரைப் பார்த்தே சொன்னார். கிருபளானியும் ஜேபியும் லோகியாவின் நியாயத்தை ஏற்றாலும் கட்சி ஆட்சி போவது குறித்து யோசித்தனர். கூட்டத்திலிருந்து லோகியா walk out செய்தார்.

ஆவடி காங்கிரஸ் 'சோசலிச மாதிரி சமூகம்' தீர்மானம் பி எஸ் பிக்குள் மேலும் கொள்கை குழப்பங்களை உருவாக்கியது . அசோகாமேத்தா போன்றவர் நேருவை பலப்படுத்தவேண்டும். உதவிகரமான எதிர்கட்சியாக இருப்போம் என்றார். சொந்த கட்சியை பலப்படுத்த விரும்பாமல் நேருவை இங்கிருந்துகொண்டு பலப்படுத்துவது என்ன நியாயம் என்கிற கேள்வியை லோகியா எழுப்பினார்.

பம்பாய் பிரதேச கவுன்சிலில் அசோகா எதிர்த்து மதுலிமாயி பேசினார் என்பதற்காக லிமாயியை அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கினர். கட்சிக்கு விரோதமாக, காங்கிரசை ஆதரித்து பேசிய அசோகா மீது நடவடிக்கையில்லை. ஆனால் லிமாயி மீது எடுப்பது சரியா என்ற கேள்வியை லோகியா எழுப்பினார். அமைப்புகள் மேதாவை அழைப்பது போன்று லிமாயியையும் அழைத்து அவர் கருத்தையும் செவிமடுக்கட்டும் என்றார். உ பி கமிட்டி லிமாயியை

அழைத்தது. உ பி கமிட்டி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தனர். நியாமற்ற அமைப்பு முறையாக லோகியா இதனைப் பார்த்தார்.

கட்சி உறுப்பினர் மட்டுமல்ல, கிளை முதல் உள்ள அமைப்பு நிலைகளிலும் 'கட்சி எனில் கட்டுப்பாடு' - இல்லையேல் நடவடிக்கை என்றனர். ஒழுங்கு கட்டுப்பாடு என்ற பெயரில் மைனாரிட்டி மீதான அடக்குமுறை அமைப்பில் கூடாது என்றார் லோகியா. சீனியர் தலைவர்களை விமர்சித்தாலே நடவடிக்கை என்றால் , நாம் சர்வாதிகாரத்தை கட்ட விழைகிறோமா எனக் கேள்வி எழுப்பினார். கட்சியின் பிரதான சக்தியை நாம் கொள்கை மீதான விவாதங்களில் செலவழிக்க வேண்டுமே தவிர, ஒழுங்கு நடவடிக்கை கம்பு சுற்றலில் அல்ல என லோகியா பேசலானார்.

அமைப்பு கடைபிடிக்கவேண்டிய அம்சம் ஒன்றை லோகியா முன்வைத்தார்.

Disciplinary action should be resorted only when absolutely necessary, it should not be done merely on expression of opinion. You can ban anti party action but expressing opposition to party policy should not call for for disciplinary action. If democracy is to be strengthened the questions before the party should be in public knowledge too

Broadly it seems the problem in the party is not discipline but policy. If party adopts such collector- patwari or officer- subordinate system, the existing democratic relationship will breakdown and the party will be subjected to unbridled dictatorship.

Inner party discipline does not mean that not a word be uttered against senior leaders. Give top priority to the principles , then to organisation and the last to the individuals.

வரலாற்றில் அமைப்புகள் பிளவுண்டு போவதை எவரே தடுத்திருக்க முடிகிறது…பெருந்தோழமைகள் சரிவதை வரலாறால் தடுக்க முடியவில்லை. அறியும்போது வருந்தலாம். .. உழைத்து களைத்தவர் பலர் மனக்காயங்களுடனேயே புதைக்கப்படுவதும் உண்டு. எரியுண்டவர் சாம்பல் போலவே அவரவர் பங்களிப்பும் காற்றுடன்… 25-8-2024

aug 26

2004க்குப் பின்னர் defined benefit pension scheme என்பதிலிருந்து அரசாங்கம் வெளியேறி contributory pension scheme NPS க்கு சென்றது. புதிய ஊழியர்களையும் முன்பு இருந்த அதே ஓபிஎஸ் பழைய திட்டத்தில் வைக்கவேண்டும் என மத்திய மாநில அரசு ஊழியர்கள் போராடி வந்தனர். அவ்வப்போது என்பி எஸ் ல் பல்வேறு அமைச்சரகங்கள் சார்பில் சில மாற்றங்கள் நடந்தாலும், பழைய பென்சன் திட்டமே என்கிற போராட்டம் நடந்து வருகிறது.

ஆந்திர திட்டம் 2023 சட்டப்படி அங்கு ஓபிஎஸ் சாயலில் பென்சனுக்கு ஊழியர் பங்களிப்பை தொடர்ச்செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தினர். கீழ்கண்ட பெயரில் அதைக் காணமுடியும்.

THE ANDHRA PRADESH GUARANTEED PENSION SYSTEM ACT, 2023

ARRANGEMENT OF SECTIONS (ACT No.31 of 2023)

அரசாங்கம் நிதிச் செயலர் திரு சோமநாதன் கமிட்டி ஒன்றை அமைத்து அதன் பரிந்துரைகளை ஏற்று தற்போது UPS திட்டத்தை கேபினட் ஒப்புதலுடன் மத்திய அரசு ஊழியர் தேசிய கவுன்சில் தலைவர்களிடம் சொல்லியுள்ளனர். பிரதமர் திரு மோடி அவர்களை ஆக 24 அன்று மாலை சந்தித்துள்ளார்.

எட்டாவது ஊதியக்குழு , 80 வயதுக்கு குறைந்தவர்களுக்கும் கூடுதல் பென்சன் திட்டம், முடக்கப்பட்ட கிராக்கிப்படியை விடுவித்தல் போன்ற பெரும் எதிர்பார்ப்புகள் ஊழியர்களிடம் இருந்தன. பல அம்சங்களை சுட்டிக்காட்டி ஊழியர் தரப்பும் கடிதம் எழுதியது.

20 ஆண்டுகளாக அதிருப்தியுடன் சென்ற திட்டத்தில் வந்துள்ள மாறுதல்களை அதிகாரபூர்வ அரசிதழ் வெளியீடோ அல்லது உரிய அமுலாக்க உத்தரவு ஷரத்துக்களோ பார்த்துதான் சரியான புரிதலை பெறமுடியும். அதே நேரத்தில் அதன் மய்யமான ஷரத்துக்களை அரசு செய்திக்குறிப்பில் தந்துள்ளனர். ஆந்திர மாதிரி

எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 25 ஆண்டுகள் முழு பென்சனுக்கு (50 சத அடிப்படை ஊதியம்) எனச் சொல்லியுள்ளனர். குறைந்தால் விகிதாச்சார பென்சன் என்பதை முழு உத்தரவு வந்தபின்னர் தான் சரி பார்க்க வேண்டும்.

ஆந்திர சட்டத்தில் இப்படியுள்ளது

4. Conditions of Eligibility for Availing Benefits under APGPS:-(1)The

APGPS subscriber shall become eligible to receive the benefits under the Guaranteed Pension System subject to sub-section (3) of section 6 and the following conditions:

(a) Rendering of a minimum often (10) years of qualifying service, if retiring on superannuation;

(b) Rendering of a minimum of twenty (20) years of qualifying service, if retiring from service on voluntary retirement;

(c) Rendering of a minimum of thirty three (33) years of qualifying service, if retired by the Government in the public interest;

(d) Rendering of a minimum of ten (10) years of qualifying service, if retiring from service on Medical Invalidation.

மத்திய அரசின் யுபிஎஸ் ஷரத்து எப்படி அமையும் எனப் பார்க்க வேண்டும். கேபினட் ஒப்புதல், ஒரு சிலரின் எதிர்ப்பின்மை என்கிற சூழலில், போராடுவோம் என முடிவெடுப்பவர் போராட இயலும். என்றாவது ஒருநாள் தீர்க்கலாம் என 20 ஆண்டுகளாக காத்திருந்தது போல் தொடர் நம்பிக்கையில் அப்போராட்டம் அமையலாம். தொழிலாளர் தூய தொழிற்சங்கம் என்பதைவிட, பிரச்சனை தீர்க்கும் தொழிற்சங்கம் எனபதில் கூடுதல் நம்பிக்கை வைப்பர்.

இருந்த என்பிஎஸ் வருகின்ற யுபிஎஸ் என்ன முன்னேற்றம்- (அது போதுமானதல்ல காண்ட்ர்ப்யூட்டியுடந்தான் வருகிறது என்றாலும்)- என்பதை தொழிற்சங்கங்கள் அதன் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் முன் வைப்பது நலம். அடைந்தால் மகாதேவி அடையாவிட்டால் மரணதேவி என்கிற இசம் தொழிற்சங்கத்தில் உதவவில்லை என எங்கள் அனுபவம் எங்களுக்கு சொல்லித்தந்தது. நாங்கள் புரட்சிகர இயக்கமாக இல்லாமல் இருந்தாலும், தொழிலாளர் இன்றும் தங்கள் ஓய்விற்கு பின்னரும் நினைத்து மகிழும் மதிக்கும் தொழிற்சங்கமாக இருந்திருக்கிறோம்.

எங்கள் அனுபவம்தான் சிறந்தது எனச் சொல்லவில்லை. அது மத்திய அரசு ஊழியர் இயக்கத்தில் குறிப்பிடத்தகுந்த முக்கிய சோதனை எனச் சொல்லமுடியும்.

26-8-2024

aug 27

profession teaches immorality என்கிற முக்கிய படிப்பினை ஒன்றை காந்தி முன்னெடுத்தார். தனிமனிதனாக அதை அப்படி செய்திருக்கவேண்டாமோ, அப்படி சொல்லியிருக்கவேண்டாமோ, ஒன்றும் தவறாக தெரியவில்லையே என நினைக்கும் மனம் ,பொறுப்பு என்கிற கிரீடம் தாங்கும்போது வேறு ஒன்றாக சொல்கிறது- ஏற்கவே முடியாது என்பதற்கான சமாதானங்களைக் கண்டு பிடிக்கிறது.

தனி மனிதனாக ஒருவன் எம்பி எம் எல் ஏ முதல்வர் பிரதமர் என்கிற கனவு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசியல் கட்சியில் பொறுப்பில் இருக்கும்போது, எங்கள் கட்சி ஆட்சி அதிகாரத்திற்காக நிற்கவில்லை எனச் சொல்ல முடியுமா எனத் தெரியவில்லை.

ஆண்ட கட்சிகள் தாங்கள் பிரச்சனைகளை தீர்த்ததாக சொல்லவும் செய்வார்கள். இனியும் ஏராளம் செய்ய வேண்டியுள்ளது எனவும் சொல்வார்கள். தவறில்லை. தாங்கள் ஆண்டது போதும் என அவர்களால் சொல்ல இயலாது. அவர்களின் அவதார மகிமைகள் தொடரவே விழைவார்கள்.

எம்பி யாக கங்கணா அவர்கள் பேசியதால் பாஜக தன்னை அதிலிருந்து வேறுபடுத்திக் காட்டியதுடன் அவர் பேசியதை ஏற்க முடியாது என்றும் சொல்ல வேண்டியிருந்தது. அவரே இந்தியா முழுவதற்குமான vote catcher என்றால் அப்படி சொல்லியிருக்குமா என்பது கேள்விக்குரிய ஒன்று. கங்கணா அல்ல இங்கு பிரச்சனை, தனி மனித மனம் -எண்ணம் என்பது எப்படி அடங்கிப்போக வேண்டியதாகிறது என்பது பிரச்சனை. தனது சுதந்திர உணர்வு முக்கியம் என அவர் கருதினால் அவர் இழப்பதற்கு தயாராக வேண்டும் என்பது அரசியல் சமூகச் சூழல்.

காந்தி வழக்கறிஞர்களை வைத்து தனிமனித மனம் வேறாக நினைத்தாலும், தொழில் அதை விடுவதில்லை எனச்

சுட்டிக்காட்டியிருப்பார். தொழில் என்பது இருப்பிற்கான கருவி..அதை இழந்தால் என்னவாகும் என்கிற அச்சம் மனிதனை துரத்தும். எனவே தான் தனிப்பட்ட கருத்தாக எதைக் கொண்டிருந்தாலும் / கொள்ளாவிட்டாலும் - அரசு/ கட்சி/ அமைப்பின்/ தொழில் கருத்து என்பதாக தன்னை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டி வருகிறது. காரியத்திற்காக பேசுவது உறவைக் கட்டுவது என்பது மனிதன் கற்றுக்கொண்ட கலைகளில் ஒன்று. தொழிலுக்கு எப்போதும் அதன் வாடிக்கையாளர்கள் அவசியம். அவர்களுக்கான தேவைகள் உருவாக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும். அங்கு தீர்ந்துவிட்டது, இனி சுபம் என்கிற இறுதியுரை எதற்கும் எழுத இயலாது. மனிதன் தொழில் முனைவோனாக்கப்பட்டு வருகிறான். கையில் தொழில் இருக்கிறது என்பதுதான் அவனின் பெரும் நம்பிக்கையாக இருக்கிறது. பிறர் எவ்வளவு ஏமாறுகிறார்கள் என்பது அதில் பிரச்சனையே இல்லை. பிறரின் அறியாமை என்பதுடன் தொழில் திறமையும் அதற்கான பலனும் நேர்விகிதத்தில் அமையும்.

இனி காந்தி வழக்கறிஞர்கள் முன்வைத்து சொன்ன வரிகள்

Gandhi makes an important distinction between acts induced by an institution and acts undertaken because of one’s inclinations. Making this analytical distinction in the context of acts of lawyers he says:

Lawyers are also men, and there is something good in every man. Whenever instances of lawyers having done good can be brought forward, it will be found that the good is due to them as men rather than as lawyers. All I am concerned with is to show you that the profession teaches immorality; it is exposed to temptation from which few are saved.

27-8-2024

aug 28

அமைப்பு என்றாலே அதற்கான game rules பொதுவாக இருக்கத்தான் செய்யும்.பொறுப்பிற்கு வந்தவர்களிடத்தும் - வர விரும்புவர்கள் அல்லது அவர்கள் செய்வதை ஏற்கமுடியாதவர்கள் மத்தியிலும் ஒருவகை போராட்டம் மெலிதாகவோ மிகுந்த உஷ்ணத்துடனோ நடக்கவே செய்யும்.

இப்போது காங்கிரசில் பல விலகல்கள் நடந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். 1936லும் பெரும் மண்டைகள் மத்தியில் இப்படி ஒரு போராட்டம் நடந்தது. நேரு காங்கிரசின் தலைவர். கிருபளானி பொதுச்செயலர். வல்லபாய், பிரசாத், ராஜாஜி, தெளலத்ராம், பஜாஜ் கிருபளானி எல்லோரும் ஒருசேர ஒன்றாக கையொப்பமிட்டு நேருவின் அணுகுமுறையால் இணைந்து வேலை செய்யமுடியாது என்பதை தெரிவித்து CWC யிலிருந்து விலகும் கடிதத்தை ஜூன் 29, 1936ல் கொடுத்தனர்.

நேரு மத்திய செயற்குழுவில் ஜெயபிரகாஷ் போன்ற மூன்று சோசலிஸ்ட்களையும் வைத்திருந்தார். அவர்களுடன் நேருவிற்கு ideological affinity அதிகம் இருந்ததில் வியப்பு இருக்க முடியாது.

எப்போதும் சோசலிசம் சொத்து பறிப்பு என காங்கிரசின் தலைவர் பேசுவதால் பல காங்கிரஸ்காரர்கள் தேசவிடுதலை என்பதற்கு காங்கிரஸ் தலைவரிடம் முன்னுரிமை இருக்கவேண்டாமா என அதிருப்தி அடைந்ததை மூத்த அந்த விலகல் தலைவர்கள் சுட்டிக்காட்டிருந்தனர்.

நேரு இவர்களுக்கு எந்த பதிலையோ அல்லது வேண்டுகோளையோ விடவில்லை. விலகல் தலைவர்கள் காந்தியை சந்தித்தனர். அவரின் அறிவுரையை ஏற்று இரண்டே நாட்களில் அதாவது ஜூலை 1, 1936ல்

தங்கள் விலகல் கடிதத்தை திரும்ப பெறுவதாகவும், தனிப்பட்ட வருத்தம் நேருவிடம் ஏதும் இல்லை எனவும், எங்களை போன்றவர்களை வழக்கொழிந்தவர்கள் எனச் சொல்லும் பிரச்சாரம் தொடர்ந்து நடந்தபோது, நேருவிற்கு உகந்த ஒருமித்த செயற்குழு அமைத்துகொள்ளட்டும் என்ற மன உணர்வில் விலகலை தந்ததாகவும் எழுதினர் . காந்தியை சந்தித்தையும் அவர்கள் தெரிவித்திருந்தனர். இரண்டு கடித draftயையும் பிரசாத் தான் செய்திருந்தார்.

நேருவிடம் இதற்கும் பதில் இல்லை. அவர் காந்திக்கு ஜூலை 5, 1936ல் கடிதம் எழுதுகிறார். செயற்குழுவில் ஆவி போகிறது என்ற உள்ளக் குமுறலை பதிவு செய்திருந்தார். தாங்கள் ஓரளவிற்கு நிலைமைகளை சீராக்கியுள்ளீர்கள். எவரிடத்தும் எவருக்கும் loyalty இருப்பதாக தெரியவில்லை என்பது அக்கடித உள் குறிப்பாக இருந்தது.

கிருபளானி மீது நேருவிற்கு வருத்தம் இருந்தது. மூத்தவர்கள் இப்படி கருதுகிறார்கள் என்பதை அவர் சொல்லாமல் இருந்தது ஏன் என்பது நேருவின் கேள்வி. இதற்கு தன்னிலை விளக்கமாக கிருபளானி நீண்ட கடிதம் ஒன்றை எழுதினார். காந்திக்கு அடுத்த தான் விரும்பும் மிக முக்கிய தோழர் நேருதான். கிருபளானி சுசேதா திருமணமே நேரு சிறையிலிருந்து வெளிவந்த பின்னர்தான் என தள்ளிப்போட்டோம். ஆனால் சோசலிச எண்ணம் என்னிடம் இருந்தாலும், ரஷ்யாவின் சில சாதனைகளைப் பாராட்டினாலும் அதுதான் மாடல் எனச் சொல்லி, காந்தியை சிறுமைப்படுத்த முயற்சிக்கும் போக்கு விடுதலை போராட்டத்திற்கு தீங்காக அமையும் என்பதால் சோசலிஸ்ட் இளைஞர்கள் எதிர்த்து போராட வேண்டியுள்ளது என கிருபளானியின் விளக்கம் சென்றது.

இதற்கும் நேருவிடமிருந்து பதில் இல்லை...

இப்படியாக அமைப்பில் இன்று பெரும் தலைவர்களாக கருதப்படுவோரெல்லாம் மனம் கசந்த பின் இணைந்து பணிசெய்த

வரலாற்றைப் பார்க்கிறோம். அமைப்பு பணி என்றால் குழு உராசல் இல்லாமல் இருப்பதில்லை. கூடுதல் சகிப்புத்தன்மை எல்லைக்கோட்டுடன் சற்று நிதானம் என்பது இருந்தால் அமைப்பின் ஒற்றுமை கூடும். முடிந்தவரை double standard என்பது இல்லாமல் ஆக்கிவிட்டால் , அவ்வப்போது அவரவர் turning search light inward- self introspection என்பது அமைப்பு வீரர்களுக்கு பழக்கமாகிவிட்டால் அந்த அமைப்பு பலரின் நம்பிக்கையை பெறலாம்

Inputs My Times An Autobiography of J B Kripalani

aug 30

குமரப்பா வாசிப்பு

காந்தி மார்க்ஸ் நேரு அம்பேத்கர் வாசிப்பு போல் விரிவான கிடங்குகள் இல்லாவிட்டாலும், குமரப்பா வாசிப்பிற்கும் பலமணிநேர உழைப்பு தேவைப்படுகிறது. குமரப்பாவிற்கான collected works என்பதெல்லாம் இல்லை. அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள், கட்டுரைகளின் தொகுப்புகள், அவர் குறித்து சிலர் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் என சில நமக்குக் கிடைக்கும்.

1892-1960 கால 68 ஆண்டுகளில் பெரும் ஆரவாரம் வெளிச்சம் ஏதுமின்றி அமைதியாக, அவ்வப்போது தன் சக தோழர்களிடம் கோபப்பட்டு முடிந்து போன பெரு வாழ்வு அவருடையது.

தஞ்சை நகர்ப்புறத்தில் பிறந்து சென்னை , லண்டன், நியுயார்க் எனப் பார்த்து படித்து டாக்டர் பட்ட ஆய்வுகளை முடித்துக்கொண்டு பம்பாய் நகரத்திற்கு , மற்ற எவரையும் போல ஆடிட்டராக சம்பாதிக்க வந்தவர் தான் ஜே சி குமரப்பா. பெருங்குடும்பம். வெளிநாடுகளில் கல்வி பெற்ற குடும்பத்தினர். குழந்தையாக இருந்ததிலிருந்து பிறர் மீதான கரிசனம் குறித்து சொல்லிக்கொடுத்த புரோட்டஸ்டண்ட் குடும்பம்.

இந்திய வறுமை, பிரிட்டிஷ் சுரண்டல் கொடுமை குறித்த theoretical பின்புலத்துடன் 1929 காந்தி சந்திப்பு அவரை முழுநேர கிராம ஊழியனாக்கியது. 1960 ஜன 30 இறக்கும்வரை கிராம வாழ்வு அதன் உன்னத முன்னேற்றம் என்கிற கனவிற்கான வாழ்நாள் உழைப்பை அந்த மனிதர் தந்தார். அதற்காக பேசினார். எழுதினார். சிறை அனுபவித்தார். நேருவுடன் சண்டையிட்டார். சக காந்தியர்களுடன் கோபமாக விவாதித்தார். தனிப்பட்ட egoவோ , அவர்களது அதிகார நாற்காலி குறித்த பொறாமையோ அவரிடம் இல்லை.

காந்தியுடன் வாழ்ந்த காலத்தின்மதிப்புகள், கடைசி மனிதனின் கண்ணியம் என்பதற்கான போராட்டங்களே அவரை உலுக்கி அலைக்கழித்தது. கிராமத் தொழில் வளர்ச்சிக்காக ஆயிரக்கணக்கான

மைல்களுக்கு செல்ல வைத்தது. இந்திய மண்ணிலிருந்து பட்டினி வறுமை வேலையின்மை சமூக அவலங்களை விரட்ட முடியும் என தன் எழுத்துக்கள் வழி அவர் சொல்லிவந்தார்.

பணப்பொருளாதாரத்தின் கோரங்களையும் அதன் சமூகக் கேடுகளையும் விரிவாக விவாதித்த குமரப்பா, அப்படியே ரூபாய் இருக்க வேண்டுமெனில், அதன் மதிப்பை ஏழை உழைப்பாளர் கையில்தான் ஒருவரால் காணமுடியும் என்றவர். நம் ஒவ்வொருவருக்குமான முக்கிய கேள்வி ஒன்றை அவர் எழுப்பினார். என் கையில் கூடுதலாக வரப்போகும் ரூபாயில் நான் செய்யப்போவதென்ன என்கிற மனசாட்சி முன் நிறுத்தப்பட்ட கேள்வியது.

இந்திய கிராமத்தொழில்களை அழித்திடாதவகையில் எந்திரவகை பெருந்தொழில்கள் என அவர் பேசியது எடுபடாமல் போனது. சக தோழர்களிடம் அவர் நொந்து போனார். தன்னால் முடிந்த வேலைகளை மகன்வாடி, செல்டோ, கல்லுப்பட்டியில் செய்து பார்த்தார்.

காந்தி மறைவிற்குப் பின்னர் காந்தியுடன் வாழ்ந்த பல தோழர்கள் பல்வேறு வழிகளில் பயணித்தனர். அவரவர் காந்தியை முன் நிறுத்தியோ, அல்லது நிறுத்தாமலோ தங்களுக்கான 'ஸ்கூல்களை ' வைத்துக்கொண்டார். அவர்கள் 'அனைவருக்குமான வேலை-அகிம்சை வழி முறை' என்பதில் சந்திக்காமல் இல்லை. ஆனாலும் தனித் திசை பயணங்களை மேற்கொண்டனர். ஒருவர் மீது மற்றவர்க்கு விமர்சனங்கள் எழத்துவங்கின.

அரசாங்க அதிகார வழி , லோகியா மொழியில் government Gandhians, சென்ற நேரு படேலுக்கு பெருமளவு புகழ் கூடியது. நேருவிற்கு நாடு முழுக்க ஏன் உலக அளவிலும் செல்வாக்கு படர்ந்தது. அரசாங்கத்துடன் உரசல் இல்லாமல் தன் வேலையைச் செய்வதா,மோதிக்கொண்டு கெடுத்துக்கொள்வதா என்கிற குழப்பமும்

காந்தியர்களிடம் ஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசில்லையே, நமது அரசுதானே, நாம் பார்த்து பழகிய தோழர்களின் அரசாங்கம் தானே- விமர்சனங்களில் வெம்மை ஏன் என்கிற கேள்விகள் அவர்களிடம் இருந்தது. அப்படியிருக்க முடியாது. அதிகாரம் குறித்த நமது கேள்விகள், அவர்கள் திட்ட செயல்பாடுகள் குறித்த விமர்சனங்கள் வெள்ளையா பழுப்பா என்றெல்லாம் பார்த்து செய்யக்கூடியதல்ல எனக் கருதினார் குமரப்பா. வழக்கம்போல் harsh ஆன விமர்சனங்கள் அவரிடம் வெளிப்பட்டன.

அவர் தனித்துவிடப்படவேண்டிய நிலை உருவானது. பழகியவர்கள் தள்ளிப்போகினர். உடல்நலம் பாதிக்கப்பட்டபோது , மரியாதை கருதி வந்து விசாரித்து செல்பவர்களாயினர். அவரது சிந்தனைகளை எடுத்து தொடர்ந்து விவாதித்து சமூகத்திடம் கொண்டு செல்லக்கூடிய வலிமையான institutional ஏற்பாடுகள் இல்லாமல் போயின. ஆங்காங்கே திட்டுதிட்டாக அவர் குறித்து பேசக்கூடிய செயல் வீரர்களுடன் அவர் சுருங்க வைக்கப்பட்டார்.

முதலாளித்துவம் சாதிய பின்புலம் கொண்ட நிலபிரபுத்துவம் என்பதற்கு மாற்றாக மார்க்சிய விமர்சனம் என்பதே வழியாக இருந்த காலத்தில் , சோவியத் சீனா மாற்று குறித்த சோசலிச கட்டுமான அனுபவங்களையும் எடுத்துகொண்டு காந்திய பொருளாதார கட்டுமானம் என்கிற புதிய உத்தியை குமரப்பா முன்வைத்தார். முதலாளித்துவம் குறித்த non Marxist critique என்பதில் குமரப்பா மற்றும் அவரது சகோதரர் பரதன் குமரப்பாவிற்கு முக்கிய பங்கு இருக்கிறது. குமரப்பாகாந்தியத்தையும் கம்யூனிசத்தையும் குழப்புகிறார்- கம்யூனிஸ்ட் போல் பேசி எழுதிவருகிறார் என்கிற விமர்சனம் அவர் மீது வந்தது

தமிழக அரசோ மத்திய அரசாங்கமோ அவர் நினைவு குறித்த செய்திகளுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்கிற சிந்தனை கூட இல்லா obscure மனிதராக்கப்பட்டார் (பொது வெளியில்) குமரப்பா.

அவரது வாழ்க்கை குறித்த செய்திகளில் இடைவெளிகள் இருக்கின்றன. அவர் குடும்பத்தாருடன் எப்படி உறவை வைத்திருந்தார். குடும்பத்தார், சக தோழர்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்திருந்தாரா, அவருக்கு திருமணம் குறித்து எத்தகைய எண்ணம் இருந்தது, எந்தப் பெண்ணாவது அவர் மனதிற்கு நெருக்கமாக இருந்தாரா- அம்ரித் குறித்து என்ன நினைத்தார் போன்ற தனி மனித வாழ்க்கை குறித்த இடைவெளிகள் தென்படுகின்றன. லண்டன் அமெரிக்க வாழ்க்கைக்காலம் எப்படியிருந்தது..காந்தியும் அவரும் சந்தோஷித்த கடித்துக்கொண்ட தருணங்கள் எவை என்கிற கேள்விகளும் எனக்குள் ..

ஆகஸ்ட் 28, 2024 அன்று காந்தி கல்வி நிலையத்தில் குமரப்பா குறித்து அறிமுகப்படுத்தும் உரை ஒன்றிற்கு வாய்ப்பு தந்தார்கள். கொஞ்சம் உழைப்பை கொடுத்து தயாரிக்கப்பட்ட உரைதான். சைத்ரா ரெட்கர் நூல் ஆய்வு நூலாக இருந்ததால் எடுத்துக்கொண்டேன். பெரும் theoretical exercise கொண்ட முதல் இயலை சற்று தவிர்த்தே என் உரையைக் கட்டிக்கொண்டேன். அந்நூலில் எனக்குத் தென்பட்ட இடைவெளிகளுக்காக வேத் கோவிந்தன் web of freedom, ஊட்டி நண்பர்கள் வெளியிட்ட back to basics, Mark Lindley வின் Gandhi's economist (இணைய வழியில்) , குமரப்பா சகோதரி எழுதிய கட்டுரை (ராமச்சந்திரன் தொகுப்பு) ஆகியவற்றை துணைக்கு வைத்துக்கொண்டேன். அன்று இணையவழி வந்து கேட்டவர்களுக்கும் , காந்தி கல்வி நிலையத்தார்க்கும் என் நன்றி. அவ்வுரை இணையத்தில் போடப்பட்டிருக்கிறது. வாய்ப்புள்ளவர் கேட்கலாம். எளிமையான ஆழமான மானுட நேயமிக்க மனிதரைப் பற்றி , முடிந்தவரை எளிமையாக அதே நேரத்தில் making of Kumarappa என்கிற விரிந்த நோக்கில் அமைக்கப்பட்ட உரையது.

உரையில் பெருந்தவறு ஒன்றை செய்துள்ளேன். அவர் மறைந்த 75 ஆண்டுகள் என தவறாக குறிப்பிட்டுள்ளேன். அதற்கு பொது வெளியில் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்.

குமரப்பா என்கிறவர்க்கு தமிழர் என்கிற அடையாளமோ , காந்தியர் என்கிற அடையாளமோ என்ன தரப்பட்டாலும், கிராம ராஜ்ய - கிராம உத்யோக கண்ணியம் குறித்த பெருங்கனவுக்காரர் என்கிற அடையாளம் என் வாசிப்பு வழி பெறமுடிந்தது. அவரின் கனவு அவ்வளவுதானா.. திட்டு சோதனைகளின் திவலைகள் மட்டும்தானா.. காலம் சொல்லட்டும்…

30-8-2024